விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 ஆனி 1 ஷபா 22 இதழ் 122

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 15—6—82


## "சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமியின் முன்மாதிரியைப் பின்பற்றவேண்டும்"

### முத்திரை வெளியீட்டில் யாழ். மாவட்ட அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

"குறுகியமனப்பான்மைக்கும் அவசர முடிவுகளுக்கும் பிரிவினை நோக்கங்களுக்கும் எதிராகவே சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி வாழ்ந்தார்" என்றுயாழ். மாவட்ட அமைச்சர். திரு. யு. பி. விஜயக்கோன், சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமியின் ஞாபகார்த்த முத்திரை வெளியீட்டுவிழாவில் பிரதம பிரமுகராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ். இந்துமகளிர் கல்லூரியில் சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி ஞாபகார்த்தக் குத்தலைவர் திரு எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் முத்திரை வெளியீட்டு விழா நேற்றுக்காலை நடைபெற்றது.

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா, யாழ் மாவட்ட செயலாளரும், யாழ். அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா, ஓய்வுபெற்ற நீதியரசரும், யாழ். பல்கலைக்கழக வேந்தருமான திரு. வி. மாணிக்கவாசகர், மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன், மாகாண தபால்அத்தியட்சகர் திரு ஏ. சி. கந்தசாமி ஆகியோர் குத்துவிளக்கேற்றி வைத்தனர்.

திரு. வி. மாணிக்கவாசகர், சேர் வைத்தியலிங்கம் துரை

(8-ம் பக்கம் பார்க்க)

# பல்கலைக்கழக அனுமதிவிபரம் இம்மாதம் வெளியாகும்

## பேராதனை: 1420; யாழ்: 545

### கொழும்பு: 860; மட்டக்களப்பு: 75

(கொழும்பு)

**பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிபெற்றவர்களின் விபரமும், அவர்கள் எந்த நெறிக்கு, எந்தெந்தப் பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற்றுள்ளனர் என்பது குறித்தும் இம்மாத இறுதிக்குள் தனித்தனியாக அறிவிக்கப்படவிருக்கிறது.**

புதிதாகப் பல்கலைக்கழகங்களுக்கு 5200 க்கு அதிகமானோர் அனுமதிக்கப்படவிருக்கின்றார்கள்.

பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர் விபரம்: பேராதனை – 1420, ஸ்ரீஜெயவர்த்தனபுர – 950, கொழும்பு – 860, களனி –740, யாழ்ப்பாணம் –545, மொறட்டுவ – 270, றுகுண பல்கலைக்கழகக் கல்லூரி – 385, மட்டக்களப்பு பல்கலைக்கழகக்கல்லூரி – 75.

புதிய ஆங்கிலப் பயிற்சி நெறி ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பமாகும்.

## புதிய மன்னருக்கு மக்கள் ஆதரவு

றியாட் ஜூன். 14

சவூதி அரேபியா மன்னர் காலித் காலமானதையடுத்து புதிய மன்னராக நியமிக்கப்

(8-ம் பக்கம் பார்க்க)

## நோர்வேயில் கொடிதினம்; நூலக வாரம்!

[யாழ்ப்பாணம்]

யாழ். நூலக புனரமைப்பு தொடர்பாக ஏடனில் நூலக வாரம் கொண்டாடுவதற்காக ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படும் அதேநேரத்தில்நோர்வே நாட்டிலும் நூலகவாரம் கொண்டாடஅங்குள்ளதமிழ்ச் சங்கம் கடந்தமாதம் 29-ம் திகதி கூடிதீர்மானித்துள்ளது. ஜூலை மாதம் முதலாம் திகதி கொடித்தினம் கொண்டாடத் தீர்மானித்து இருப்பதாகமேற்படி நோர்வே தமிழ்ச்சங்கச் செயலாளர் நா. விமலாதேவி யாழ் மாநகரமுதல்வருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

நோர்வே நாட்டின் அனைத்துப்பாகங்களிலும் வதியும் தமிழர்களை இந்நூலகவாரத்திற்கு ஒத்துழைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும், 5000 கொடிகள் இங்கிருந்து அச்சிட்டு அனுப்புமாறும் கோரப்பட்டுள்ளது.

அங்கு, கொடிகள் அச்சிடுவது சிரமமென்பதாலும் ஏற்கனவே இலங்கையில் நூலக வாரங்கள் கொண்டாடப்பட்டதாலும் அச்சடிக்க பட்டுள்ள கொடிகளை ஒஸ்லோவிலுள்ள விஜயசேகருக்கு அனுப்புமாறும் கோரியுள்ளார். (சி)

## ஆனந்தி கொலைவழக்கு: எதிரிகள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

ஜேக்கப் ஆனந்தி கொலை வழக்கில், யாழ். நீதிபதி திரு. ரி. ஜோசுநாதன் இவ் வழக்கை, மேல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்த போதிய சாட்சியங்கள் இல்லை என்று தெரிவித்து எதிரிகளை விடுதலை செய்தார்.

[8-ம் பக்கம் பார்க்க]

## புதுவை எழுத்தாளர் மன்றம் 500 புத்தகங்கள் அன்பளிப்பு

[யாழ்ப்பாணம்]

புதுவை மாநில எழுத்தாளர் மன்றம் யாழ். பொதுசன நூல் நிலையத்துக்கு 500 புத்தகங்கள் கொண்ட ஒரு புத்தகத்தொகுதியை அன்பளிப்புச் செய்ய முன்வந்துள்ளது.

புதுவை மாநில எழுத்தாளர் மன்றம் இம்மாத இறுதியில் ''புனித தலங்கள்'' எனும் நூல் வெளியீட்டு விழாவை நடத்துகின்றது. நூலை திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த புதுவை முதலமைச்சர் திரு. தெ. இராமச்சந்திரன் வெளியீடு செய்துவைப்பார்.

''புனித தலங்கள்'' வெளியீட்டு விழாவில் வைத்தே புதுவை முதலமைச்சர் திரு. தெ. இராமச்சந்திரனிடம் யாழ் பொதுசன நூல்நிலையத்துக்கு புதுவை மாநில எழுத்தாளர் அன்பளிப்பாக வழங்கும் புத்தகத் தொகுதி வைபவரீதியாக கையளிக்கப்படவிருப்பதாக எழுத்தாளர் மன்றப் பிரமுகரும், ''பூஞ்சோலை'' இதழின் ஆசிரியருமான கவிஞர் காரை ஏ. ஏ. ஆலீம் யாழ். மாநகரமுதல்வர் திரு. இராஜா விசுவநாதனுக்கு கடிதமூலம் தெரிவித்துள்ளார். (சி)

## பேராதனை பல்கலைக்கழக மாணவர் சத்தியாக்கிரகம்!

(கொழும்பு)

பௌத்த பிக்கு ஒருவர் ஜனாதிபதியைத் துரோகிஎன்று அண்மையில் கூறியதை ஆட்சேபித்து பேராதனைப்பல்கலைக்கழக மாணவர்களிலொரு பிரிவினர் நேற்றுத் தொடக்கம் சத்தியாக்கிரகம் செய்து வருகிறார்கள்.

இச்சத்தியாக்கிரகம் பத்து நாட்களுக்கு இடம்பெறுமென்றும், ஒவ்வொருநாளும் இதில் பத்து மாணவர்கள் 12 மணித்தியாலம் கலந்துகொள்வார்களென்றும் கூறப்பட்டது.

அவதூறான வார்த்தைகளைப் பேசுவது பௌத்த தர்மத்திற்கு மாறானதென்றும், இச் செயல்புரிந்த அந்தப் பௌத்த பிக்கு இவ்வாறு கூறியதற்கு வருத்தம் தெரிவிப்பதுடன், இத்தகைய செயல்களை வரும் காலத்திலும் செய்யக்கூடாது என்றும் இந்த சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டமாணவரொருவர் தெரிவித்தார். [வெ]

## கருணாநிதி புதுடில்லி பயணம்

(சென்னை)

தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதியும், தமிழ்நாடு சட்டசபை உறுப்பினர் திரு. முரசொலிமாறனும் நேற்று புதுடில்லி பயணமானார்கள்.

இவர்கள் அங்கு பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்து இந்திய ஜனாதிபதித் தேர்தல உட்பட மற்றும் பல விவகாரங்கள் குறித்துக் கலந்துரையாடுவார்கள் எனத் தெரியவருகிறது. (வெ)

## இறுதிச் சடங்கில் இந்திய உப ஜனாதிபதி

புதுடில்லி, ஜூன். 14

சவூதி அரேபியா மன்னர் காலித்தின் இறுதிச்சடங்குகளில் கலந்து கொள்வதற்காக இந்திய உப ஜனாதிபதி ஜனப் ஹிதயத்துல்லா றியாட் சென்றுள்ளார், (வெ)

## கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி

### ஜனாதிபதி திறந்துவைப்பார்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி எதிர் வரும் 25 ம் திகதி வெள்ளிக்கிழமை சம்பிரதாய பூர்வமாக ஜனாதிபதி ஜே ஆர். ஜயவர்த்தனவால் திறந்து வைக்கப்படவுள்ளது. அத்துடன் பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியின் புதிய மூன்று மாடிக் கட்டிடத்தையும் ஜனாதிபதி அன்றயதினம் திறந்துவைப்பார்.

இவ்விரு நிகழ்ச்சிகளின் பின்னர்இருபாடசாலைகளும் இணைந்த ஒரு பொதுக் கூட்டத்தில் ஜனாதிபதி உரையாற்றுவார். பொதுக்கூட்டம் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும். (சி)

## கூட்டுறவு ஊழியர் தொடர்பான வழக்கு: "தொழில் நீதிமன்றத்திற்கு விசாரணை செய்ய நியாயாதிக்கம் உண்டு"

### பூர்வாங்க ஆட்சேபனைமீது தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவு ஊழியர் தொடர்பான வழக்கை விசாரணை செய்ய தொழில் நீதிமன்றத்திற்கு நியாயாதிக்கம்உண்டென வட பிராந்திய தொழில் நீதி மன்றத்தலைவர் திரு எஸ். என். குருசாமி, தெல்லிப்பளை கூட்டுறவு ஆஸ்பத்திரிசபைக்கு எதிரான வழக்கில் இடைக்கால தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கு சாவகச்சேரியிலுள்ள வடபிராந்திய தொழில் நீதிமன்றத்தில் தொழில் நீதி மன்றத்தலைவர்திரு. எஸ். என். குருசாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் தெல்லிப்பளை கூட்டுறவு ஆஸ்பத்திரிசபைக்கு எதிராக அங்குகடமையாற்றிய ஊழியரான டாக்டர் என். கோபாலசிங்கம், 82 பெப்ரவரி மாதம் 21-ம் தேதி தம்மை நியாயீனமாக வேலைநீக்கம் செய்ததாகத் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பதாரரான டாக்டர் கோபாலசிங்கம் சார்பில் சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம், சட்டத்தரணி கே. குணரத்தினம், சட்டத்தரணி எஸ். தியாகராசா ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார்.

தெல்லிப்பளை கூட்டுறவு ஆஸ்பத்திரி சபைசார்பில் சட்டத்தரணி எம். கே. சுப்பிரமணியம், சட்டத்தரணி ஆர். என். சிவப்பிரகாசம் ஆகியோர் ஆஜரானார்கள்.

விண்ணப்பதாரரான டாக்டர் கோபாலசிங்கமும், தெல்லிப்பளை கூட்டுறவு ஆஸ்பத்திரி சபைத்தலைவர் வி சரவணமுத்துவும், கோர்ட்டில் சமுகமளித்திருந்தனர்.

72-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட கூட்டுறவு ஊழியர்சட்டத்தில் 39ம் ஷரத்தின் பிர

(8-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்லூர் அரசவீதியில் வைத்தியர் அரசபிள்ளை நடராசா வீட்டிற்கு அருகாமையில் 2 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு பிற்பகல் 1-00 மணிக்குப்பின் தொடர்புகொள்ளவும். N. சண்முகலிங்கம், அரசபிள்ளை வைத்தியசாலை, 46, அரசவீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (3542)

### பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில்

திருகோணமலை, கச்சேரி வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற மயில்வாகனம் கைம்பெண் அழகசுந்தரம் என்பவரின் மரணசாதனத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்

சாமுவேல் பத்மராசா பொன்னையா பெண் பரிமலர்சோதி, 31 வன்னியார்வீதி, திருகோணமலை.

மனுதார்.

மரணசாதன நியாயாதிக்கம் இல. 560

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

அக்கறையுள்ள ஆள்எவரும் 1982 ஆம் ஆண்டு ஆனி மாதம் 18-ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
சி. இராமலிங்கம்
பதிவாளர்

1982ஆம்ஆண்டு ஆனிமாதம் 2-ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. 3525

### தேவை

மோட்டார் உதிரிப்பாக ஸ்தாபனத்துக்கு G. C. E சித்தியடைந்த பெண் தேவை. 20-6-82க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல;3533, C/o ஈழநாடுலிமிட், யாழ்ப்பாணம். [3533]

### பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

மானிப்பாய் உடுவில் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற கார்த்திகேசு தேவராஜா அவர்களின் மரணசாதனமில்லாச் சொத்துக்களுக்கு நிர்வாகத்தத்துவம் பெறும் விடயத்தில்

(மரணமெய்தியவர்)

திருமதி சிவமணி தேவராஜா, 'தேவஸ்தான்', உடுவில் வீதி, மானிப்பாய்

மனுதார்

மரணச்சொத்து நியாயாதிக்கம் இல: T/3670

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனமில்லாத தத்துவ வழக்கு மேலே குறிக்கப்பட்ட இறந்துபோனவரின் ஆதனங்கள் மற்றும் சொத்துக்கள் ஆகியவற்றை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் 1982-ம் ஆண்டு ஆடி மாதம் 30 ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றார்.

1982-ம் ஆண்டு சித்திரை மாதம் 23-ம் திகதி.

தா. குலஞானம்
பதிவாளர்

வரைந்தவர்:
சி. இராசேந்திரன்
மனுதாரின் சட்டத்தரணி

3476


## கைதான இலங்கை தீவிரவாதிகள்:

# இந்தியத் தலைநகரில் கண்டன சுவரொட்டிகள்

புதுடில்லி, ஜூன் 14

தமிழகத்தில் கைதான இலங்கை தீவிரவாத தமிழ் இளைஞர்களை இலங்கைக்கு நாடு கடத்த வேண்டாமெனக் கோரி தமிழகத்தில் மட்டுமின்றி இந்தியாவின் தலைநகரான புதுடில்லியிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

பல கட்சிகள், இயக்கங்கள் சார்பில் மட்டுமின்றி தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ்கட்சியினர் சார்பிலும் ஆங்கிலத்தில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

''பிரதமர் அம்மையாருக்கு வேண்டுகோள்'' எனத் தலைப்பிடப்பட்ட சுவரொட்டியொன்றில் ஆங்கிலத்திலிருந்த வாசகங்கள் சில வருமாறு:

'இலங்கையில் பொலிஸ் இராணுவ காவலில் அப்பாவித் தமிழ் இளைஞர் துன்புறுத்தப்பட்டு மிருகங்களைப்போல் கொல்லப்படுகிறார்கள், தமிழ்ப் புலிகளுக்கு வழக்கு விசாரணை அல்ல. கொடுமைப்படுத்தலும் சுருக்கமான தூக்குத் தண்டனையுமே இலங்கையில் காத்திருக்கிறது. இந்தியாவிற்கு எதிரான அமெரிக்கச் சார்பு ஜயவர்த்தன ஆட்சி இந்தியாவிலிருந்து தமிழ் இளைஞர்களை நாடு கடத்தக் கோருகிறது உலகெங்குமுள்ள பல லட்சக் கணக்கான தமிழர்கள் பாரத மாதாவிடமிருந்து இரக்கத்தையும் அடைக்கலத்தையும் எதிர்பார்க்கிறார்கள்.

''தாயே இந்திரா'' துரதிருஷ்டமான இவ்விளைஞர்களுக்கு அரசியல் அடைக்கலம் வழங்குக. நாடு கடத்தல் வேண்டாம். ஏனெனில் துரோகம் இந்தியாவின்பாரம்பரியம் அல்ல''

தமிழகத்தில் மேற்படி தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சியினரால் தமிழில் பல்வேறு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. ''நாதியற்ற ஈழத் தமிழர்நீதிகேட்கிறான்'' என்று மகுடமிடப்பட்டு தமிழினத்தின் தாய்வீடான தமிழ்நாடு ஈழ விடுதலை வீரர்களை இலங்கை அரசிடம் ஒப்படைக்காதீர்'' என்று கோரி இச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (சி)

## மண்டைதீவில் இளைஞர்சேவை மன்றக்கிளை

[மண்டைதீவு]

தேசிய இளைஞர்சேவை மன்றத்தின் மண்டைதீவுப் பகுதி அங்குரார்ப்பணக் கூட்டம் மன்ற உத்தியோகத்தர் திரு. க. முருகையா தலைமையில் இம்மாத இறுதியில் நடையெறவிருக்கின்றது,

பதினைந்தாயிரம் ரூபாவுக்கு உட்பட வேலைத்திட்டங்களைச் செய்ல்படுத்துவதே மன்றத்தின் முக்கிய நோக்கமாகும் இப்பகுதியிலிருக்கும் முப்பது வயதுக்கு உட்பட்ட இருபாலாரும் மன்றத்தில் உறுப்பினர்களாக சேர்ந்து கொள்ளலாமென்றும், இவர்கள் மன்றத்தினல் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திவேலைகளில் பங்குபற்றுவதன் மூலம் நாள் ஒன்றுக்கு எட்டுரூபாவீதம் பெறலாமென்றும் மன்ற உத்தியோகத்தர் தெரிவித்தார். [அ]


## 31-ம் நாள் நினைவாஞ்சலி



வீ. இராசசிங்கம்

தோற்றம்: 22-03-1931

மறைவு: 16-05-82

எங்களை ஆருத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில்கொண்டு தவிக்க விட்டு நீங்கிச்சென்ற அன்புத் தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

44, புதுவீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.
3545


## காலஞ்சென்ற தியாகலிங்கம் கியு. சி.

# சுயசிந்தனையுடன் சுதந்திரமாக செயல்பட்டார்

### பிரதம நீதியரசர் அஞ்சலி

(கொழும்பு)

சுய சிந்தனையுடன் சுதந்திரமாகச் செயல்பட்டுவந்த திரு. ஸி. தியாகலிங்கம், தனது இறுதிக் காலத்திலும், தான் கொண்ட கொள்கையிலிருந்தும் நழுவாது ஸ்திரமாக இருந்துவந்தார் என்று பிரதம நீதிரசர் திரு. நெவில் சமரக்கோன் பிரபல சட்டத்தரணி திரு. ஸி தியாகலிங்கத்தின் மறைவு குறித்து அஞ்சலி செலுத்தி உரையாற்றுகையில் கூறினர்.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு உயர் நீதிமன்றத்தில் நடைபெற்ற திரு. ஸி. தியாகலிங்கத்துக்கு அஞ்சலி செலுத்தும் வைபவத்தில் பிரதம நீதியரசர் திரு. நெவில் சமரக்கோன் உட்பட நீதியரசர்களான திருவாளர்கள் எஸ் சர்வானந்தா, ஜே. ஜி. ரி. வீரரத்ன, ஆர். எஸ். வணசுந்தரா, பேர்ஸிகொலின் தொமி, எவ். எ. சோஸா ஆகியோருடன் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு சிவா செல்லையா, மாவட்ட நீதிபதி திரு. விக்கிரமகுணரட்ண, திரு. கீர்த்திவிஜேவர்தன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

பிரதமநீதியரசர்தொடர்ந்து உரையாற்றுகையில் 'நான் சட்டத்துறையில் பிரவேசித்த பொழுது திரு. ஸி. தியாகலிங்கம் திறமையான சட்டத்தரணியாக விளங்கினர் தனது கருத்துக்களை வெளியிடுவதில் பின்நிற்காது துணிவுடன் தாம் எடுத்த வழக்குகளை நடத்தி வந்தார். வரது போக்கு சில சட்டத்தரணிகளால் இனங்காண முடியாத வகையில் இருந்தது. நாளடைவில் அவரது திறமையைப் படிப்படியாக சகலரும் அறிந்து அதற்கு மதிப்பளித்தனர்.

திரு ஸி. தியாகலிங்கத்தை தமது வழக்குகளுக்கு ஏற்படுத்திக்கொண்டோர் ஒருபோதும்குறைப்பட்டுக்கொண்டது கிடையாது. அவரது கடுமையான உழைப்பும், திறமையான வாதமும் அவரது கட்சிக்காரரைத் திருப்தியடையச் செய்தன என்றார்.

இவ் வைபவத்தில் சட்டமா அதிபர் திரு. சிவா பசுபதி பேசுகையில் 'திரு. ஸி. தியாகலிங்கம் தாம் எடுத்தபணியை எவ்வித கஷ்டங்களை எதிர்நோக்கியபோதிலும் வெற்றிகரமாக நிறைவேற்றுவதிலேயே கருத்தாயிருந்தார். தமதுசெல்வாக்கிற்கு அவதூறு ஏற்படுத்தும் வகையிலும், அசௌகரியத்தை உண்டுபண்ணும்விதத்திலும் எதிர்ப்புகள் வந்தபோதும் சற்றும் நிலைதளராது கடமைபுரிந்தார்.

இலங்கையின் அரசாங்கக் கட்சியிலிருந்த பிரமுகர்களுக்கும், சட்டப் பிரச்னைகள் தோன்றியபோதெல்லாம் அவர்கள் சார்பில் ஆஜராகி திரு. தியாகலிங்கம் வழக்குகளை நடத்தியுள்ளார். ஆனல் அவர் ஒருபோதும் அரசியலில் நாட்டம்கொண்டது கிடையாது. அதிலிருந்தும் ஒதுங்கியே இருந்தார் என்றார்.

இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தலைவர் திரு. ஏ. ஸி. டி. செர்ய்ஸா தமதுரையில், சட்டத்தரணியென்ற முறையில் திரு. தியாகலிங்கம் சளைக்காதும், தாம் எதிர்கொண்ட வாதங்களைக்

(5-ம் பக்கம் பார்க்க)


### கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம் கிளிநொச்சி

எமது சங்கத்தின் இருப்பில் உள்ள பின்வரும் சாக்குகள் கேள்வி விண்ணப்பங்கள் மூலம் எம்மால் விற்பனைசெய்யப்படவுள்ளன. விரும்புவோர்கள் 18-6-82 க்கு முன் ரூபா 10/- செலுத்தி எமது சங்கத்தில் பெறப்படுகின்ற விண்ணப்பப்படிவத்தில் ரூபா 150/- மீளப்பெறும் வைப்பாகச் செலுத்திய பற்றுச் சீட்டையும் இணைத்து 21-6-82 நண்பகல் 12-00 மணிக்கு முன்பாக, கடித இடதுமேல் மூலையில் ''வெற்றுச்சாக்கு விற்பனை கேள்வி விண்ணப்பம்'' எனக் குறிப்பிட்டு, பொதுமுகாமையாளர், கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம், கிளிநொச்சி என்னும் முகவரிக்கு விண்ணப்பித்தல்வேண்டும். சாக்குகளைப் பார்வையிட விரும்புவோர், சங்கத்தின் எந்த ஒரு வேலை நாட்களிலும் பார்வையிடலாம். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பகாரர் 25-6-82-க்கு முன்பாக முழுப்பணத்தையும் செலுத்திச் சாக்குகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

| சாக்கு | இருப்பு |
|---|---|
| 3 புசல் சாக்கு | 547 |
| 3 புசல் வாய்வெட்டுச் சாக்கு | 182 |
| 2, 1/2 புசல் சாக்கு | 835 |
| 2 அந்தர் சீனிச் சாக்கு | 47 |
| 1 அந்தர் சீனிச் சாக்கு | 2108 |
| மாச் சாக்கு | 2365 |
| நவதானியம் | 405 |
| 1 அந்தர் அரிசிச் சாக்கு | 12469 |
| நைலோன் பாக் | 650 |
| நானுவிதம் | 1576 |

பொதுமுகாமையாளர்

8-6-1982. 3544



# லெபனனிலிருந்து சிரியா, இஸ்ரேல் துருப்புகள் வெளியேற வேண்டும்!

## அமெரிக்கா முதல் தடவையாக அறிவிப்பு

டெல்அவிவ், ஜூன் 14

யுத்தநிறுத்தம் கடந்தவெள்ளிக்கிழமை அறிவிக்கப்பட்டதையடுத்து லெபனனிலிருக்கும் இஸ்ரேலிய நிலைகளில் யுத்தம் நடைபெறவில்லை என்றும் ஆனால் யுத்தநிறுத்த அறிவித்தலையடுத்து பாலஸ்தீன கொரில்லாக்கள் இஸ்ரேலிய நிலைகள் சிலமீது தாக்குதலை நடத்தியதாகவும் இஸ்ரேலிய இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இஸ்ரேலிய ஊடுருவலையடுத்து ஏற்பட்ட பெரும்மோதல் தற்போது ஓரளவு தணிந்திருக்கின்றபோதிலும் இஸ்ரேலிய வீரர்கள் தெற்கு லெபனன் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்துக்கு மிக அருகிலுள்ள இடமொன்றில் இறங்கியிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தென்லெபனனின் பிரதான நகரான டயர் உட்படப் பல கேந்திர நிலைகளை ஆக்கிரமித்துள்ள இஸ்ரேலியர்கள் அந்நாட்டு ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்துக்கு அருகிலே இறங்கியுள்ளதாகக் குறிப்பிடப்படும் இடம் மலைப்பாங்கான பகுதியெனத் தெரிவிக்கப்பட்டது.

தென்லெபனனில் ஏற்பட்டிருக்கும் யுத்தத்தை நிறுத்தி உடனடியாக அந்நாட்டிலிருந்தும் சிரியா, இஸ்ரேல் ஆகியன வெளியேற வேண்டுமென அமெரிக்கா முதல் தடவையாக அறிவித்துள்ளது.

தொலைக்காட்சிச் சேவையொன்றுக்கு அளித்தபேட்டியொன்றிலேயே அமெரிக்க ராஜாங்க அமைச்சரான ஜெனரல் அலெக்சாண்டர் ஹெய்ச் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யுத்தத்துக்கு மாஸ்கோவிலிருந்து செயல்படும் சில சக்திகளே காரணமென்றும் திரு. ஹெய்க் குற்றம் சுமத்தினர்.

இதுஇவ்வாறிருக்க இஸ்ரேலிய படைகளை எதிர்த்து சிரியாவுடன் சேர்ந்து போரிட ஈரான் தனது வீரர்களை அனுப்பிவைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

விமானமொன்றில் சிரியாவுக்கு ஈரானிய துருப்புக்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன வென்று தெரிவிக்கப்பட்டபோதிலும் அவற்றின்தொகை பற்றித் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை.

சில தினங்களுக்கு முன்னர் ஈராக்கின் பாக்தாத் விமான நிலையத்தில் விமானமொன்று ஈரானியத் துருப்புக்களுடன் தரித்து நின்றதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

பெரும் போரில் ஈரானுடனீடுபட்டு கணிசமானளவு உயிர்ச்சேதங்களையும் பொருட்சேதங்களையும் ஏற்படுத்திக்கொண்ட ஈராக், தற்போது தென்லெபனனில் இஸ்ரேலிய ஊடுருவலைத் தடுக்குமுகமாக போரை நிறுத்தி, ஈரான் துருப்புக்களைத் தனது நாட்டினூடாகத் தென்லெபனன் செல்ல அனுமதி வழங்கியுள்ளது வாசகர் அறிந்ததே. (கி)

# எகிப்திய ஜனாதிபதி நேரில் அஞ்சலி

றியாட், ஜூன் 14

சவூதி அரேபிய மன்னரின் மறைவுகுறித்துநேரில் அஞ்சலி செலுத்தும் பொருட்டு எகிப்திய ஜனாதிபதி ஜனப் ஹொஸ்னி முபராக் றியாட் பயணமானர்.

அரபு நாடுகளின் பகை நாடான இஸ்ரேலுடன் எகிப்து சமாதான உடன்படிக்கைகளை மேற்கொண்டு நட்பாகவிருந்து வருவதை சவூதி அரேபியாவும் ஏனைய அரபு நாடுகளுடன் சேர்ந்து கண்டித்து வந்தது.

ஜனாதிபதி ஜனப் முபராக்கின் இவ்விஜயம் சவூதியுடனை நட்புறவுகளைஎகிப்துபுதுப்பித்துக் கொள்ள வாய்ப்பாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது. (கி)

# அணுயுத்தத்தைத் தவிர்க்க மதத்தலைவர்கள் கடுமையாக உழைக்க வேண்டும்

## தாய்லாந்து பௌத்த பல்கலைக்கழக செயலாளர் கருத்து

பாங்கொக், ஜூன், 14

''வாழ்க்கை என்பது இயற்கை கொடுத்ததொரு புனித அன்பளிப்பு'' என்று புத்தசமயம் கருதுகிறது. இந்த வாழ்க்கையை உயர்வாக மதிக்கிறது. ''மனிதனாகப் பிறப்பதே மிகக் கஷ்டமானது'' என்று புத்தபகவான் கூறினர். எனவேதான் அவர் மனித வாழ்க்கையை மட்டுமல்ல, எல்லா ஜீவராசிகளின் வாழ்க்கையையும் அழிக்கக்கூடாது என்று தன் சிஷ்யர்களுக்குப் போதித்தார். ஒருவர் கொலை செய்வதும், கொலைசெய்யப்படுவதும் தவிர்க்கப்படல் வேண்டும் என்றும் புத்தர் கூறினர்.''

இவ்வாறு தாய்லாந்திலுள்ள பௌத்த பல்கலைக்கழகத்தின் பிரதம செயலாளரான வணக்கத்துக்குரிய நர்கோர்ன் கெமாபாலி கூறினர்.

''பௌத்தமதம்; எத்தகைய யுத்தத்துக்கும் கலவரத்துக்கும் எதிரானது, சமாதானத்தை மேம்படுத்துகிறது என்பதையே காட்டுகிறது. எல்லோரது நன்மைக்காகவும் எல்லோரது சந்தோஷத்துக்காகவும் புத்தபகவான் தம் வாழ்க்கையை அர்ப்பணித்தார். எனவே அன்புக்கும் பரிவுக்குமான மதமே பௌத்த மதம்'' என்றும் அவர் கூறினர்.

''மத சார்பற்ற அரசியல்; மனிதனை ஆலயங்களின்றும் பிரித்துவிட்டது என்பதை நாம் ஒத்துக்கொள்ளவேண்டும். திருச்சபைகளது குரல் மேலும் மேலும் சீமைதியடைந்து வருகிறது. எல்லா மதங்களிலுமே இப்பிரச்னையுண்டு. இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண, சகல மதத்தவர்களும் தம் வேறுபாடுகளை மறந்து உலகின் மேன்மைக்காக உழைக்கவேண்டும். அப்போதுதான், ஒரு அணுவாயுத யுத்தத்தில் ஏற்படக்கூடிய, நினைக்கவே முடியாத, உலகின் அழிவு குறித்து மக்களுக்கு உணர்த்தமுடியும். அவர்களது எண்ணங்களில் செல்வாக்குச் செலுத்தமுடியும்'' என்றும் இந்தத் தாய்லாந்து பௌத்த பிக்கு கூறினர்.

''ஒரு அணுயுத்தம் ஏற்படுமானல் அதில் எந்த நாடும் வெற்றிபெறமுடியாது. இது முழு உலகையுமே அழிக்கும் ஆற்றல்கொண்டது. எவராவது இந்த யுத்தத்தில் வெற்றியடையலாம என்று நினைத்தால் அது அபத்தமான எண்ணமாகும். அண்மைக் காலத்தில் எல்லைக்குட்பட்ட அணுயுத்தப்பற்றிக் கூறப்படுகிறது, இது தவறுன கருத்து. உலக அழிவுக்கு இதுவே போதும். மதத் தலைவர்களனை வரும் இந்த அபாயத்தை அகற்ற கடுமையாக உழைக்க வேண்டும். உழைக்க முடியும் உலகத் தலைவர்கள் அனைவரும் அணுவாயுத உற்பத்தியை நிறுத்திவிட்டு, உலகின் நெருக்கடிகளைச் சமாதானமாகத் தீர்க்கப் பேச்சுவார்த்தைகளில் இறங்கவேண்டும்'' என்றும் கேட்டுக்கொண்டார்.

# 'ஆஸியான்' ஸ்தாபனத்தில் இலங்கைக்கு இடமில்லை!

சிங்கப்பூர், ஜூன் 14

தென் கிழக்கு ஆசிய நாடுகளின் ஸ்தாபனத்தில் [ஆசியான்] சேர்ந்துகொள்ள இலங்கை விடுத்துள்ள கோரிக்கை நிராகரிக்கப்படலாம் என்று இங்கு கருதப்படுகின்றது.

இந்த நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்களின் வருடாந்த மகாநாட்டுக்கான ஏற்பாடுகளைச் செய்துவரும் நிலைஇயல் குழு இலங்கையை அனுமதிப்பது சாத்தியமில்லை என்ற முடிவுக்கு வந்திருப்பதாகத் தெரிகின்றது. பூகோளரீதியில் சம்பந்தப்பட்ட பகுதிக்கு வெளியில் இலங்கை இருப்பதே இதற்கு முக்கிய காரணமாம்.

சிங்கப்பூர் வெளிநாட்டு அமைச்சர் திரு. சுப்பையா தனபாலன் தலைமையிலான மேற்படி நிலையியல் குழுவே இந்த ஸ்தாபனத்தின் ஒன்றிணைப்பு அமைப்பாகச் செயல்பட்டுவருகின்றது. தாய்லாந்து மலேஷியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா ஆகியவை இதன் ஏனைய உறுப்பு நாடுகளாகும்.

ஆஸியான் ஸ்தாபனத்தில் சேர்ந்துகொள்வதற்கு இலங்கை கடந்த வருடம் விண்ணப்பம் செய்திருந்தது. உறுப்பு நாடுகளுக்கிடையில் ஒருமித்த கருத்து ஏற்படவேண்டுமென்பதற்கே இந்த விண்ணப்பம் பற்றி முடிவெடுப்பது பின்போடப்பட்டது.

பப்புவா நியுகினியின் விண்ணப்பம் பற்றி முடிவுசெய்வதையும் நிலைஇயல் குழு பின்போட்டுள்ளது. [பி)

# தேநீரில் பாம்பு விஷம்! ஒருகுடும்பத்தில் 4பேர் பலி!!

[கொழும்பு]

காலையில் அருந்தியதேநீர் ஒரு குடும்பத்தின் நான்கு பேரின் உயிரைக் குடிக்கும் யமனாக மாறியிருக்கின்றது. ரத்மலானையில் இடம் பெற்றுள்ள இச்சம்பவம் வருமாறு.

கேத்தலில் நீரை ஊற்றி கொதிக்கவைத்து தேநீர் தயாரித்து தனது மூன்று பேரப்பிள்ளைகளுக்கும் கொடுத்து தானும் அருந்தியிருக்கிறார் ஒரு பாட்டி. முன்னதாகவே கேத்தலுக்குள் புடையன் பாம்பொன்று நுழைந்திருந்த விடையம் அவருக்குத் தெரியாது. தண்ணீர் கொதித்தபோது பாம்பு கேத்தலினுள்ளேயே அவிந்து செத்திருக்கிறது. அது நஞ்சைக் கக்கியிருப்பதால் தண்ணீரில் நஞ்சு கலந்திருந்துள்ளது.

மரணவிசாரணையில் இத்தகவல் வெளிவந்தது.

# அகஸ்தியர் நாவல் இந்தியாவில் வெளியீடு

சென்னை' ஜூன் 14

ஈழத்தின் பிரபலமுற்போக்கு கலை இலக்கியவாதியும் மக்கள் எழுத்தாளருமான நாவலாசிரியர் திரு. எஸ். அகஸ்தியர் எழுதிய 'எரிமலை' என்றநாவல் 'எரிநெருப்பில் இடைபாதை இல்லை' என்ற தலைப்பில் நூலாக இந்தியாவிலிருந்து வெளிவருகின்றது.

இந்தியாவில் உள்ள என். சி. பி. எச் என்ற பாரிய புத்தக வெளியீட்டு ஸ்தாபனத்தில் வெளிவரும் இந்நாவல் 1968ம் ஆண்டு 'ஈழநாடு' பத்திரிகை நடத்திய அகில இலங்கை நாவல் போட்டியில் விசேட பரிசு பெற்றுப் பல்லாயிரக்கணக்கான வாசகர்களை ஈர்த்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# கால் நடைகளுக்கு எலக்ரோனிக்கருவி மூலம் உணவூட்டும் முறை

(கொழும்பு)

எலக்ரோனிக் கருவிமூலம் கால்நடைகளுக்கு உணவூட்டும் முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பசுமாடுகள் வளர்க்கப்படும் தொழுவமொன்றில் மாடுகளின் கழுத்தில் எலக்ரோனிக் கருவி பொருத்தப்பட்ட கழுத்துப் பட்டிகள் பொருத்தப்படும். அப்பட்டியிலுள்ள கருவி மூலமாக மாடு உண்ணவிரும்பும் உணவின் அளவு, அதன் தன்மை ஆகியனபற்றி பண்ணையிலுள்ள உணவூட்டும் தொழிலாளி அறிந்துகொண்டு தேவைக்கேற்றவாறு உணவுகளை வழங்குவார்.

இவ்வாறு கால்நடைகளுக்கு எலக்ரோனிக் கருவிகொண்டு உணவூட்டும்முறை கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால், அவை விரும்பி உண்ணும் அளவை எளிதில் அறிந்துகொண்டு உணவளிக்கமுடியும் என்றும். மற்றும் இனப்பெருக்கத்துக்கான வழிமுறைகளைக் கூட அவ் எலெக்ரோனிக் கருவி மூலம் அறிந்துகொள்ளமுடியுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

# சுழி. கிழக்கு கி. உ. சபை கோரிக்கை

(சுழிபுரம்)

சுழிபுரம் கிழக்கில் தற்போது கடமையாற்றும் கிராமசேவையாளரை இடமாற்றம் செய்யாது அவரது காலஎல்லைவரை கடமையாற்றவிடுமாறு சுழிபுரம் கிழக்கு கிராமோதய சபையினர் அரசாங்கஅதிபரை கேட்டுள்ளனர்.

# ஸ்பெயினில் நேட்டோ நடவடிக்கைகள்

மாஸ்கோ, ஜூன் 14

ஸ்பெயினில் நேட்டோ மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் நேட்டோவின் செயல்களை மேலும் விஸ்தரிப்பதாகவுள்ளது. இந்நாட்டின்ராணுவ செலவீன அதிகரிப்பு, இந்நாட்டின் உழைக்கும் மக்கள் மீது பெரும் சுமையை ஏற்படுத்துவதாயுள்ளது. அத்துடன் பெரும் பொருளாதார நெருக்கடிகளையும் ஏற்படுத்தியுள்ளது. நேட்டோ நடவடிக்கைகள் ஸ்பெயினுக்குள் நிகழ்ந்துள்ளமையால், நாட்டின் ஜீவாதாரப் பிரச்னைகளை தீர்ப்பதற்குப் பதிலாக அது மேலும் அதிகரிக்கவே செய்யும்''என்று சோவியத் ஏடான 'இஸ்வெஸ்தியா' பத்திரிகை கண்டனம் தெரிவித்துள்ளது.

# இலவச தையல் பயிற்சி நிலையம்

(பண்டத்தரிப்பு

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்க மகளிர் மத்திய குழுவினரால் இலவச தையல் பயிற்சி நிலையம் பண்டதரிப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### மணிவாக்கு

நான் அறியாமை, நம்பிக்கை என்ற உயிரற்ற அமைதியைவிட சிந்தனை, துணிவு, செயல் என்ற புயல்காற்று, அமளி, பிரசண்டமாருதம் இவைகளை விரும்புகிறேன்.

— இங்கர்சால்

# நமது நோக்கு

## அழிக்கப்பட வேண்டியவை மனிதர்கள் அல்ல

''மன்னிக்க வேண்டும் ஆஞ்சனேயா! தெரியாமல் மரியாதைக் குறைவாகப் பேசிவிட்டேன்!''

வீமன் பணிவாக இவ்வாறு பேசினன். தலை குனிந்தான். எத்தனையோ பெரிய காரியங்களை, நல்ல விஷயத்திற்காக, தன் பலத்தை உபயோகிக்கிற அனுமானின் தன்னடக்கத்தை மனதால் மெச்சினன். தனது கர்வத்தை எண்ணி வெட்கினன்.

''வீமா என்னுடைய பலத்தைப்பற்றி ராமன் சொல்லும் வரையில் எனக்குத் தெரியாது. தெரிந்த பின்பும் நல்ல விஷயங்களுக்கே அதனை உபயோகப்படுத்தினேன். நம்முடைய பலம் பிறருக்கு பலமாக இருக்க வேண்டும் வீமா'' என்ற அறிவுரையை விளக்கினர் ஆஞ்சனேயர்.

இராமாயணமும் மகாபாரதமும் இந்தியப் பண்பாட்டின் இரு கண்கள். அன்று தொட்டு இன்று வரைக்கும் பாரதப் பண்பாட்டைப் பேணிக்காத்து வரும் இந்த இரு இதிகாசங்கள் சுதந்திர இந்தியாவில் செல்வாக்குப் பெற்றது மகாத்மாகாந்தியின் முதன்மை பெற்ற தலைமையிலே என்பது சொல்லாமல் விளங்கும். அம்மகானிலே ராமரையும் தர்மரையும் ஒருவாறு காணலாமல்லவா?

''அணுசக்தி இந்தியாவில் நல்ல ஆக்கபூர்வமான காரியங்களுக்கு உபயோகப்பட வேண்டும். அழிக்கப்பட வேண்டிய விஷயங்கள் மனிதர்கள் அல்ல. அவன் முன்னேற இடையூறாக இருக்கும் தீயசக்திகளை அழித்துவிடும் அணுசக்தியால் இந்தியாவின் தொழிற்துறைகள் முன்னேறி நாடு வளம்பெற வேண்டும்.'' என்று இந்திய நாட்டின் தந்தை விடுத்த இத்தூய்மை நிறைந்த செய்தி இந்தியாவுக்கு மட்டுமல்ல, அணு ஆயுத யுத்தத்தால் ஏற்படக்கூடிய அழிவை இன்று எதிர்நோக்கும் அனைத்துலகுக்குமே!

இரண்டாவது உலகமகா யுத்தத்தில் அமெரிக்கராணுவம் யப்பானில் பிரயோயோகித்த அணுக்குண்டு அங்குள்ள ஹிரோஷிமா நாகசாகி என்னும் இரு நகரங்களில் ஏற்படுத்திய அழிவை அறிய உயிருடன் இருந்த மகாத்மா விடுத்த எச்சரிக்கை இன்று எவ்வளவு பொருத்தமாகவுள்ளது.

இதனை இன்று உலகுக்கு ஆணித்தரமாக விளக்க வல்லமை படைத்தவர் மகாத்மாகாந்தியின் வாரிசும் உலகின் அதிகாரம் மிக்க பெண்மணியுமான திருமதி இந்திராகாந்தி என்பதை அவர் ஐ நா.பொதுச் சபைக்கு அனுப்பிய வீறுகொண்ட பேச்சில் தெளிவாகக் காணலாம்.

நேரடியாக நிகழ்த்தியிருக்க வேண்டிய கருத்து நிறைந்த இந்த உரை நாட்டின் அவசிய விவகாரங்கள் காரணமாக அவர் ஐ, நா. செல்ல முடியாத நிலையில், வெளிநாட்டு அமைச்சர் நரசிம்ஹராவ்மூலம் சமர்ப்பிக்கப்பட்டது.

உலகைச் சுற்றிப்பார்த்தால் போர்மேகம் கொள்ளாத பாகங்கள் அரிதினும் அரிது. இருபது நாட்களில் முடியுமெனக் கருதிய ஈராக் — ஈரான் யுத்தம் இருபது மாதங்கள் கடந்தும் இன்னும் முடிவடையும் நிலை கண்டதில்லை. உலகத்தில் யுத்தம் தலைகாட்டப்படாதென்று வாதாடிய மேதைகள் தத்துவஞானிகள் ரசல்பிரபு, அறிஞர்கள் ஷா, வெல்ஸ் — தோன்றிய பிரிட்டனில், சோஷலிச சித்தாந்தம் சிந்தனைச் செம்மல்களின் மனத்தைக் கவர்ந்துவரும் பிரிட்டனில் இன்றைய பெண்பிரதமர் உலகப் பொது அபிப்பிராயத்துக்கு நேர்மாருகஒரு அநியாயயுத்தத்தில்ஈடுபட்டு பெரும் அழிவைத்தேடுகிருர்.

ஏவுகணைகள் எவ்வாறு தொழிற்படும் என்ற பேராபத்தை உலகம் அறிய இந்த போக்லந்து யுத்தம் ஒரு சிறு சந்தர்ப்பம் அழித்திருக்கிறது. மேலும் இனி மூழும் யுத்தத்தில் வெற்றி தோல்வியென்ற பேச்சுக்கே இடமிராது. உலக அழிவே அணு ஆயுத யுத்தத்தின் முடிவு என்ற உணர்வு இடம்பெற்றிருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் இஸ்ரேல் என்னும் ஒரு சிறு நாடு, அமெரிக்காவின் அதிகாரத்தில் தோன்றிய ஒரு 'செயற்கை' நாடு, தன்னுடைய 33 வருட வாழ்வில் உலகை எதிர்த்துப் போராடுவதுபோல லெபனனில் பலஸ்தீனிய விடுதலை இயக்கத்தினரை தவிடு பொடியாக்கும் ஐந்தாவது பயங்கரவாத யுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றது.

பிரிட்டனுக்கு போக்லந்து யுத்தத்தில் பக்க பலமாக இருக்கும் அமெரிக்கா ஒரு கோட்பாட்டுக்கமையவே அவ்வித உதவியில் ஈடுபட்டிருக்கிறதாம். ஒரு நாடு சட்டத்துக்கெதிராக வேற்று நாட்டை ஆக்கிரமித்தல், சட்டவிரோதமான செயல் அது அப்படியாயின் இஸ்ரேலுடன் 'செல்லம் கொஞ்சுவது' நியாயமாகாது.

பாகிஸ்தானுக்கு அணு ஆயுதங்களை விற்பனை செய்வதில் தாராளமான மனப்பான்மை காட்டும் அமெரிக்கா இந்தியாவுக்கு அது அபாயமென்பதை அறியமாட்டாதா?

வேண்டிய அணு ஆயுதப் படையைக் குவித்து வைக்கும் ரஷ்யாவும், அமெரிக்காவும் எவ்வித நொண்டிச் சாட்டையும் கைவிட்டு உடனடியாக அணு ஆயுதப் போட்டியை நிறுத்தி பரிகரணம் பேச்சுக்களுடன் நின்று விடாமல் மேற்படி உற்பத்தியை உடனே நிறுத்தவேண்டும். அணு ஆயுதப்படைக் குறைப்பை காலதாமதமின்றி அமுல் படுத்தவேண்டும். இந்த ஆவேசக்குரல் இந்தியாவின் —இந்திராவின் குரல்.

மனித அழிவைத்தடுக்க தீய சக்திகளை அழிக்க, தொழிற்துறைகள் முன்னேற செல்வ—வறிய நாடுகள் நட்புவளர அணு சக்தியின் பலம் பயன்படவேண்டும்.

# ஆங்கிலம் அன்று ஆட்சிமொழி இன்று அவசியமொழி!

ஆங்கிலக் கல்வி நம்மை எவ்வளவு தூரம் முன்னேற்றியுள்ளது?

மறுப்பதற்கில்லை, உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் நம்மவரைக் குறிப்பாக யாழ்ப்பாணத்தவரை ஆங்கிலம் உச்சநிலையில் வைத்திருந்தது என்ற உண்மையை! மறைக்கவும் முடியாது

ஆங்கிலத்தில் சரளமாகவும் திறமையாகவும் பேசுவதிலும் எழுதுவதிலும் சிறந்து விளங்கிய வீரர்கள் நம் மத்தியில் ஏராளமாக இருந்தார்கள்—இருக்கிருர்கள்.

வாழ்க்கையின் வளங்கள் பலவற்றுக்கும் வடிகாலாகவும் சமூக அந்தஸ்துக்கு ஒரு சின்னமாகவும், பதவி உயர்வுக்கு ஒரு கருவியாகவும் அது விளங்கியது. அதனல் தாய்மொழியையும்கூடப் புறக்கணித்துவிட்டு ஆங்கில மோகத்தில் மூழ்கிவிட்டோம். இன்றும் கூட ஆங்கிலத்தில் பேசுவதையும் எழுதுவதையும் பெருமையாகக் கருதுகிறவர்கள் இருக்கிருர்கள்

தாய்மொழியைச் சரியாகப் பேசமுடியாதவர் —எழுதமுடியாதவர், அந்நிய மொழியில் பாண்டித்தியம் பெற்றுவிளங்குவதில் பெருமைப்படுகிருர்கள்.

அன்று ஆங்கிலம் அதிகார மொழி. அதற்கு நாம் அடிமையாக இருந்தோம். இன்று ஆங்கிலம் நம்மை ஆளும் மொழியாக இருக்கமுடியாது.

### ஜப்பானியர்

ஜப்பானியர் ஆங்கிலத்தை அதிகம் படிக்காமலே கைத்தொழில் வளர்ச்சியில் மேற்கு நாடுகளையெல்லாம் மூக்கின் மேல் விரலை வைக்கச்செய்துள்ளார்கள்.

அவர்கள் தம் நாட்டின் மீதும், தாய்மொழியின் மீதும் வைத்த பற்றுதலே இதற்கு முக்கிய காரணம்.

ஜப்பானியப் பேராசிரியர் ஒருவர் சொற்பொழிவு நிகழ்த்த வந்திருந்தார். தம் நாட்டின் தொழில் வளர்ச்சி பற்றி அவர் ஆங்கிலத்தில் பேசத் தொடங்கியவுடனேயே சபையில் சிரிப்பும், 'கசமுச'வென்ற சலசபப்பும் எழுந்தது. பேராசிரியருக்கு விஷயம் விளங்கிவிட்டது. அவர் கூறினுர்.

''எனக்கு ஆங்கிலம் அதிகம் தெரியாது. என் தாய்மொழியில் பேசினுல் உங்களுக்குப் புரியாது அதனுல்தான் தெரிந்தளவு ஆங்கிலத்தில் பேசுகிறேன். இதில் சிரிப்பதற்கு ஒன்றுமில்லை. என் தாய்மொழியை நான் சரியாகப் பேசமுடியாமல் இருந்தால் நீங்கள் சிரிப்பதில்அர்த்தமுண்டு'' என்ருர். சிரித்தவர்கள் (கறுப்புத் துரைமார்கள்) அனைவருப் 'கப்சிப்' ஆகிவிட்டார்கள்.

### வளர்முக நாடுகளில்

ஜப்பானியர்களைப் பொறுத்தவரை ஆங்கிலம் அவசியமில்லாமல் இருக்கலாம். ஆனுல் எம்போன்ற வளரும் நாடுகளில் அது அவசியமாகத் தேவைப்படுகின்றது என்பதை வலியுறுத்தல் தேவையில்லை. ஆனுல் தாய்மொழிக்கு அடுத்தபடியாகவே அது இருக்கவேண்டும்.

அந்தக்காலத்தில் ஆங்கிலப் பாடசாலைகளில் தாய்மொழியில் மாணவர் பேசினுல் தண்டனையுண்டு. ஆங்கிலத்தை மாணவர்கள் விரைந்து கற்றுக்கொள்ள இது தூண்டுகோளாய் இருந்தது. ஆனுல் அந்த அளவுக்குத் தாய்மொழிக்கு இடம்தரப்படவில்லை. இந்த நிலைமையைப் பயன்படுத்திக்கொண்ட வசதிபடைத்தவர்கள் அரசாங்க, மற்றும் பொதுத்துறைகளில் உச்சநிலைக்கு உயர்ந்தார்கள்.

### இந்தியாவில் ஆங்கிலம்

அப்போதைய அரசியல்—பொருளாதார நிலைமைகளுக்கு அது சரியாகவே இருந்தது. ஆனுல் இன்றைய நிலை வேறு.

இந்தியா போன்ற நாடுகளிலும் ஆங்கிலம் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தபோதிலும் அந்த மொழியையே பாவித்து ஆங்கிலேயரை நாட்டைவிட்டு வெளியேறச்செய்தார்கள் அந்நாட்டுத் தலைவர்கள். ஆங்கிலேயர் வெளியேறிய பிறகும் அம்மொழியை அவர்கள் வெளியேற்றிவிடவில்லை. மக்களைப் பிரித்தாள்வதற்கு ஆங்கிலேயர் ஆங்கிலத்தைப் பயன்படுத்தினர். ஆனுல் இன்று இந்திய மாநிலங்களை ஒன்ருக இணைத்துவைப்பதற்கு ஆங்கிலம் பயன்படுத்தப்படுகின்றது.

**— பி. எஸ். பி. —**

இந்திபேசாத மாநிலங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொள்ளவும் மத்திய அரசுடன் தொடர்பு கொள்ளவும் ஆங்கிலமே பயன்படுத்தப்படுகின்றது.

இந்திமொழியை தொடர்பு மொழியாக ஏற்றுக்கொள்ள ஏனைய மாநிலங்கள் முன்வராததே இதற்குக் காரணம். ஆங்கிலத்தின் இடத்தில் இந்தி இருக்கவேண்டும் என்றே இந்திபேசுபவர்கள் கருதுகிருர்கள். ஆனுல் அதனை இந்தி பேசாதவர்கள் மீது திணிக்க முயல்வது நாட்டின் பிரிவினைக்கே வழிகோலும் என்று மத்திய அரசு கருதுகின்றது. அதனுல் இந்தி பேசாத மக்கள்ஏற்றுக் கொள்ளும் வரையில் ஆங்கிலமே தொடர்ந்து இணைப்புமொழியாக இருக்கும் என்று அமரர் ஜவஹர்லால் நேரு கொடுத்த வாக்குறிதியைக் காப்பாற்றுவதாக அவரது மகள் திருமதி காந்தியும் உறுதியளித்திருப்பது அங்கு சிறுபான்மை மக்களுக்கு பெரும் ஊக்கத்தை யளித்திருக்கிறது.

இதனை மேலும் உறுதிசெய்வதாக அண்மையில் இன்னெரு சம்பவம் நிகழ்ந்துள்ளது இந்திபேசாத மாநிலங்களில் உள்ள வானெலி நிலையங்கள் 'ஆகாஷ்வாணி' என்ற இந்திச் சொல்லைப் பயன்படுத்ததேவையில்லையென்று திருமதி காந்தி அறிவித்திருப்பது தான் அது.

இங்கும் 'ரூபவாஹினியை' தமிழ் அறிவிப்புகளில்மாற்றும்படி கேட்கப்பட்டது. அது வழமைபோல் செவிடன் காதில் ஊதிய சங்காகிவிட்டது,

### பாடசாலைகளில் ஆங்கிலம்

ஆங்கிலத்தை மீண்டும் உரிய முறையில் பாடசாலைகளில் கற்பிக்க அரசாங்கம் முயற்சி எடுத்துவருகின்றது. அவசியமானுல் கட்டாயமாகவும் ஆங்கிலத்தைக் கற்பிக்கலாம் என்று ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கருதுகிருர். ஆங்கிலத்தின் அவசியத்தை வலியுறுத்தவே இப்படி ஒரு கருத்தை வெளியிட்டிருக்கின்ருர் அவர்.

நவீன விஞ்ஞான அறிவுக்கும், மேல்படிப்புகளுக்கும் ஆங்கிலம் அவசியம் தேவைப்படுகின்றது. அது மாத்திரமன்று கலை, இலக்கியம்' தத்துவம் மற்றும் நவீன சிந்தனைகள் எல்லாம் ஆங்கிலத்தில் செறிந்து கிடக்கின்றன.

ஆங்கிலத்தில் பருச்சியமில்லாத ஒருவர் சிறந்த டாக்டராகவோ, வழக்கறிஞராகவோ," விஞ்ஞானியாகவோ விளங்கமுடியாது. தமிழைமட்டும் கற்றுக்கொண்ட ஒருடாக்டர்சிங்களப்பகுதியில் தொழில் புரிவதானுல் சிங்களம் கற்றிருக்கவேண்டும். அவர் ஆங்கிலமும் கற்றிருப்பாரானுல் தமது அறிவை மேம்படுத்திக் கொள்வதுமட்டுமல்ல மேல் தாடுகளுக்கும் சென்று சிறந்த

[5-ம் பக்கம் பார்க்க]

## பொலனறுவையில் சிவாலயம்

பண்டைக்காலத்தில் இந்தியாவின் தமிழ்நாட்டை சேரர், சோழர், பாண்டியர் என்னும் மூவேந்தர்கள் சிறப்பாக ஆண்டுள்ளார்கள். இம்மூவரும் போட்டியாக சைவசமயத்தையும், தமிழையும் வளர்த்துவந்துள்ளனர். அங்கு அமைந்துள்ள அழகிய சிற்பக்கலைகள் நிறைந்த சிவாலயங்கள் பலவற்றின் மூலம், மூவரின் சமயப்பற்றை அறியலாம்.

இம்மூவேந்தர்கள் தமிழ் நாட்டை ஆண்டுவந்த காலத்தில், நமது ஈழவளநாட்டில் பொலனறுவை இராஜதானியாக விளங்கியது. சோழர்களும், பாண்டியர்களும் தமது ஆட்சிக்காலத்தில் அயல் நாடுகளை போரில்வென்று அவைகளையும் தங்கள் ஆட்சியின்கீழ் சேர்த்து அரசாண்டார்கள். அவ்அயல் நாடுகளில் நமது நாட்டிலுள்ள பொலனறுவையும் ஒன்ருகும். இவ்விருவரினது ஆட்சிக்காலத்தில் பொலனறுவையில் பல சிவாலயங்கள் உருவாக்கப்பட்டு சைவ சமயம் வளர்ச்சியடைந்துள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாக இன்று இரு சிவாலயங்கள் அழியாது கவனிப்பார் இன்றிக் காணப்படுகின்றன.

சோழர்களினது மரபிலே தோன்றிய இராஜஇராஜ சோழன் கி. பி. 985ம் ஆண்டு பட்டத்துக்கு வந்து ஆட்சிசெய்யும் பொழுது இலங்கையையும் பொலனறுவையையும் கைப்பற்றி ஆட்சி செய்தான். இவ்வரசன் சைவசமயத்திலும், சிவபெருமானிடத்தும் திருநீற்றிலும் மிகவும் பற்றுள்ளவன். இவ்வரசனே தனது அயராத முயற்சியால் சைவத்திருமுறைகளைப்பெற்று அவற்றை பதினெரு திருமுறைகளாக நம்பியாண்டார் நம்பி மூலம் தொகுப்பித்தவன் என்பதை இந்து சமயப் பாடநூல்கள் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது. இவ்வரசன் கி. பி. 1014ம் ஆண்டளவில் பொலனறுவையில் பராக்கிரம சமுத்திரத்துக்கு அண்மையில் அழகிய சிற்பக்கலைகள் நிறைந்த தூபிகளையுடைய சிவாலயத்தைக்கட்டுவித்தான் என்றும் அவ்வாலயம் 'வானவன் மாதேவி ஈசுரமுடையான் திருக்கோவில்' என்னும் பெயருடன் அழைக்கப்பட்டதாக 'சிவதேவாலயம்' என்னும் சரித்திரத்தில் எழுதப்பட்டுள்ளதன் வாயிலாக அறியக்கூடியதாகவுள்ளது. அத்திருக்கோவிலுக்கு செய்த அழகிய

(5-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

# "சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி உண்மையான 'ஜனநாயகவாதி'"

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் மேலும் பேசுகையில் கூறியதாவது:

தேசிய வீரரும் தேசாபிமானியும், உண்மையான ஜனநாயகவாதியுமான சேர் வைத்திலிங்கம் துரைசுவாமியின் நினைவாக முத்திரை ஒன்று வெளியிடப்படும் வைபவத்தில் கலந்துகொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி சட்ட சபையில் வட மாகாணத்தின் தென்பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தினார். பின்னர் ஊர்காவற்றுறைத் தொகுதியின் பிரதிநிதியாக ராஜாங்கசபையில் இருந்தார். இக்காலத்தில் அவர் அச் சபையின் சபாநாயகராக பதவி உயர்த்தப்பட்டார் அப்பதவியை கண்ணியத்தோடும் கௌரவத்தோடும் அலங்கரித்தார். அவர் இனம், மொழி, சமயம் என்ற வேறுபாட்டுடன் சிந்திக்கவில்லை. அவர் மக்களின் குரலை மதித்தார்.

"காலனித்துவ ஆட்சியின் போது தேசியவாதிகளுக்கெதிரான அடக்குமுறைகளை அவர் எப்பொழுதுமே எ ர்த்து நின்றார். அவர் சட்டசபையில் நிகழ்த்திய சொற்பொழிவுகள் யாவும் தேசியநலனைக் கருத்தில் கொண்டதாகவே இருந்தது.

இந்த நாடு காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுதலைபெற வேண்டுமென்பதற்காக ராஜாங்க சபையில் அவர் நிகழ்த்திய சொற்பொழிவுகள் அனந்தம். ஒரு தலைவன் மக்களின் குரலுக்கு செவிசாய்க்க வேண்டுமென்பதை அவர் உணர்த்தினார்.

இந்நாட்டின் மக்கள் மத்தியில் சமூக சௌஜன்யத்தையும் ஒற்றுமையையும் ஏற்படுத்துவதற்காக சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி நாட்டின் எல்லாத் தலைவர்களோடும் சேர்ந்துழைத்தார். அவர் விடுத்துச் சென்ற முன்மாதிரியை இன்றைய தலைமுறையினரும் பின்பற்றுவார்கள் என்று நம்புகின்றேன்.

இந்த முத்திரை வெளியீட்டின்மூலம் ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அரசாங்கம் மேலும் ஒரு பெரிய தலைவரைக் கௌரவித்துள்ளது என்பதில் தமிழ்மக்கள் மகிழ்ச்சி கொள்வார்கள் என்று நம்புகின்றேன்.

திரு. எஸ். ஆர். கனகநாயகம் தலைமையுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது:

சைவமும் தமிழும் வளர அரும்பாடுபட்டவர் சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி அவர்கள். அவரை வருங்காலத்திலுள்ள மக்களுக்குத் தெரியாது. எமது சந்ததியார் அவரைத் தெரிந்து வைத்திருக்க வேண்டுமென்பதற்காகவே ஞாபகார்த்த முத்திரையை வெளியிட்டுள்ளனர். இம்முத்திரை எத்தனையோ வருஷங்களுக்கு முன்பு வெளியிட்டு வைக்க வேண்டியது. காலந்தாமதித்தாவது இம்முத்திரை வெளியிட்டமைக்குப் பாராட்டுகின்றேன்.

சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி யாழ்ப்பாணக் கல்லூரியிலும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் தனது ஆரம்பக் கல்வியை கற்றார். கல்கத்தா பல்கலைக்கழகத்தில் சிறப்புப் பட்டங்களைப்பெற்ற அவர், இலங்கைச் சட்டக் கல்லூரியில் பயின்று அட்வக்கேட்டாகவும் தகைமை பெற்றார். சட்டத் தொழிலில் வேகமாக முன்னேறி அரச சட்ட வல்லுநராகவும் யாழ்ப்பாண வழக்கறிஞர் குழுவுக்கு தலைவராகவும் இருந்தார்.

இளமைக் காலத்திலிருந்தே அரசியல், சமூக, சமயப்பணிகளில் அதி தீவிரமாகஈடுபட்டு வந்த சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி, 1906ம் ஆண்டு யாழ்ப்பாண வாலிபர் சங்கம் ஒன்றை தோற்றுவிப்பதற்கு முன்னின்று உழைத்தவர்களில் ஒருவராக விளங்கினார். 1921ம் ஆண்டு நடத்தப்பட்ட மாகாண ரீதியான தேர்தலில் சட்ட நிரூபண சபையின் வட மாகாணப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டார். தேசிய ஒருமைப்பாட்டுக்கும் உடன்பாட்டுக்காகவும் பெரிதும் பாடுபட்டதுடன் சுதந்திரப் போராட்டத்திலும் முன்னின்று உழைத்தார். தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்று நிறுவ வேண்டுமென்று கேட்டவர்.

1936ம் ஆண்டு சட்டசபைக்குப் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டதோடு சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பதவி வகித்தார்,

"1937-ல் நடைபெற்ற ஆறுவது ஜோர்ஜ் மன்னனின் முடிசூட்டுவிழாவில் கலந்துகொண்ட இவருக்கு மன்னர் 'சேர்'பட்டம் அளித்து கௌரவித்தார்.

"இந்துக்களின் நலனில் அக்கறைகொண்ட சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் அதனுடன் இணைந்த பாடசாலைகள் ஆகிய நிறுவனங்கள் மூலமாகஇந்துமதப் பாடசாலைகளை நிறுவுவதில் முதன்மையாளராக இருந்தார். யாழ்ப்பாணம்இந்துக் கல்லூரியிலும் இணைந்த பாடசாலைகளினதும் தலைவராகவும், முகாமையாளராக பல காலம் கடமையாற்றினார். அவர் ஐக்கிய இலங்கை உருவாக வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தியவர்."

மாகாண தபாலதியட்சகர் திரு. ஏ. சிகந்தசாமி பேசுகையில் தெரிவித்ததாவது:

"சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி ஒரு தேசிய வீரராக இருந்தமையால்தான் இந்த ஞாபகார்த்த முத்திரையை வெளியிட்டுள்ளோம். ஓ இனத்தின் கலை, கலாசாரம், பண்பாடு, சமயம் ஆகியவற்றையும், இயற்கை வளங்கள், தொழிற்பேட்டைகள் ஆகியவற்றையும் சிறப்பித்தும் முத்திரைகள் வெளியிட்டுவருகின்றோம். சில முத்திரைகள் குறிப்பிட்ட காலத்திற்கு மாத்திரம்தான் அச்சிடப்படுகிறது. இதுவரை 50க்கு மேற்பட்ட ஞாபகார்த்த முத்திரைகள் வெளியிட்டுள்ளோம்

திரு. ஈ. சபாலிங்கம் உரை நிகழ்த்தினார்.

சேர் வைத்திலிங்கம் துரைசுவாமியின் மகனும், முன்னாள் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி நன்றி தெரிவித்துப் பேசினார். (மா)

## சுயசிந்தனையுடன்..

(2ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டு பின்வாங்காமலும் தமது கட்சிக்காரருக்காக தம்மால் இயன்றளவு போராடினார். திரு. தியாகலிங்கம் நீதிமன்றங்களில் எதிர் கொள்வதற்கு மிகவும் கஷ்டமானவராகவே விளங்கினார். அத்துடன் அவரை விளங்கிக்கொள்வதும் சிரமமாகவேயிருந்தது. ஆனால் அவரது மனம் மட்டும் சரியான இடத்லேயே இருந்து வந்ததை அவதானிக்க் கூடியதாகவிருந்தது என்றார்.

இவ் அஞ்சலி வைபவத்தில் பிரபல சிரேஷ்ட சட்டத்தரணிகளான திரு. ஸி. ரங்கநாதன் கியூ ஸி, திரு. எச். டபிள்யூ. ஜெயவர்த்தன கியூ ஸி, திரு வால்டர் ஜெயவர்த்தன, திரு. பி. நவரத்தினராஜா ஆகியோரும்பங்குபற்றியிருந்தனர். (கி)

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

தேசிய லொத்தர் சபைத் தலைமை அலுவலகத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 88?-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:-

**முதலாவதுபரிசு**

**23 J 0365**

**ரூபா ஒரு லட்சம்**

**இரண்டாவது பரிசு**

**06 N 0959**

**ரூபா 40,000**

**மூன்றாவதுபரிசு**

**25 L 0057**

**ரூபா 10,000**

ரூ. 475-44 ஆறுதல்பரிசு பெறும் நூறு டிக்கட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 09 A 0975 | 14 A 0730 |
| 19 A 0113 | 19 A 0335 |
| 19 A 0814 | 13 B 0107 |
| 16 B 0227 | 09 C 0920 |
| 10 C 0333 | 14 C 0400 |
| 14 C 0525 | 07 D 0855 |

| | |
|---|---|
| 14 D 0911 | 15 D 0082 |
| 17 D 0666 | 18 D 0449 |
| 22 D 0897 | 13 E 0342 |
| 22 E 0512 | 04 F 0784 |
| 12 F 0115 | 07 G 0910 |
| 14 G 0652 | 18 G 0742 |
| 20 G 0804 | 03 H 0627 |
| 17 H 0710 | 18 H 0559 |
| 07 J 0031 | 09 J 0582 |
| 20 J 0433 | 10 K 0588 |
| 10 K 0900 | 13 K 0646 |
| 14 K 0672 | 17 K 0621 |
| 08 L 0853 | 10 L 0478 |
| 14 L 0231 | 16 L 0362 |
| 09 M 0573 | 12 M 0381 |
| 13 M 0806 | 09 N 0841 |
| 11 N 0109 | 11 N 0803 |
| 06 O 0249 | 10 O 0140 |
| 13 O 0208 | 23 O 0492 |
| 01 P 0939 | 04 P 0653 |
| 05 P 0451 | 05 P 0811 |
| 06 P 0203 | 09 P 0834 |
| 11 P 0717 | 18 P 0673 |
| 21 P 0299 | 24 P 0841 |
| 08 Q 0869 | 09 Q 0379 |
| 01 R 0894 | 04 R 0508 |
| 07 R 0525 | 01 S 0353 |
| 01 S 0698 | 11 S 0128 |
| 13 S 0683 | 13 S 0857 |
| 16 S 0120 | 17 S 0624 |
| 23 S 0790 | 06 T 0731 |
| 08 T 0467 | 11 T 0702 |
| 18 T 0613 | 17 U 0859 |
| 19 U 0122 | 23 U 0704 |
| 10 V 0564 | 21 V 0141 |
| 22 V 0200 | 22 V 0246 |
| 07 W 0885 | 12 W 0311 |
| 14 W 0511 | 17 W 0136 |
| 05 X 0933 | 06 X 0031 |
| 03 Y 0770 | 07 Y 0537 |
| 08 Y 0803 | 10 Y 0244 |
| 13 Y 0091 | 24 Y 0015 |
| 03 Z 0868 | 16 Z 0197 |
| 20 Z 0192 | 20 Z 0651 |

(இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டியவை.)

## பொலனறுவை....

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

திருவுருவங்கள் யாவும் இன்று கொழும்பிலுள்ள நூதனசாலையில் காட்சிப் பொருளாயுள்ளன. ஆனால் மூலஸ்தானம் என்று அழைக்கப்படும் கருப்பக்கிரகத்தில் வீற்றிருக்கிற மூலவிக்கிரகமாகிய சிவலிங்கப் பெருமான் இன்றும் காட்சி கொடுக்கின்றன. பாழடைந்து காணப்படும் இவ்வாலயத்தை சைவ சமய மக்கள் அனைவரும் பார்த்துக்கொண்டிருப்பது மிகவும் கவலைக்குரியவிடயமாகும்.

இன்றைய 20ம் நூற்றாண்டில் சைவாலயங்கள் பலவற்றில் திருப்பணிகள் நடைபெற்று புனருத்தாரணம் செய்யப்பட்டு மகாகும்பாபிஷேகம் நடாத்தப்பட்டு வருவது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இதேபோலவே பொலனறுவை இரண்டாம் சிவாலயத்தையும் புனருத்தாரணம் செய்து வழிபாட்டுத் தலமாக்கவேண்டியது சைவ சமய மக்கள் அனைவரினதும் கடமையும் விருப்பமுமாகும். தற்பொழுது இந்தியாவின் தமிழ்நாட்டில் இராஜஇராஜ சோழனின் நினைவாக ஐயந்தி தினவிழா கொண்டாடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது, இலங்கைவாழ் சைவமக்கள் திருமுறைகளை தொகுப்பித்துத்தந்த சோழனுக்குசெய்ய வேண்டிய நற்பணி அவன் கட்டுவித்த பொலனறுவை இரண்டாம் சிவாலயத்தை புனருத்தாரணம் செய்து வழிபாட்டுத்தலமாக மாற்றுவதே யாகும்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

து. ஜெயதீஸ்வரன்,
எஸ். கோவிந்தராஜ்,
கொழும்பு.

## ஆங்கிலம்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

பயிற்சியைப்பெறமுடியும். இவ்வாறே ஏனைய துறைகளுக்கும் ஆங்கிலம் அவசியம் தேவைப்படுகின்றது. எனவே தம்பிள்ளைகளுக்கு ஆங்கிலக் கல்வியையும் புகட்டுவதற்கு பெற்றோர் முன்வரவேண்டும்.

இப்பொழுது மத்திய கிழக்கிற்கு நம் இளைஞர்கள்விழுந்தடித்துக்கொண்டு செல்கிறார்கள். இவர்களில் ஆங்கிலம் தெரிந்தவர்கள் அது தெரியாதவர்களைவிட நல்ல நிலையில் இல்லையா?

ஆங்கிலம் நாட்டின் சகல பாடசாலைகளிலும் உரிய முறையில் கற்பிக்கப்படுமானால் அது எதிர்காலத்தில் மொழிவாரி மக்களை இணைக்கம் சக்தியாகவும் விளங்கமுடியும்.

சிங்களத்தை தமிழர் படிக்க விரும்பாததுபோலவே தமிழைப்படிப்பதனால் தமக்கு எந்த பயனும் ஏற்படப் போவதில்லையென்று சிங்கள மக்கள் கருதுகிறார்கள் இருதரப்பினருமே ஆங்கிலத்தை விரும்பிப்படிப்பார்களானால் அது இரு தரப்பினருக்குமிடையிலான இணைப்பு மொழியாகப் பரிணமிக்கமுடிம் ஆங்கிலத்தின் அவசியத்தை சிங்கள மக்கள் இப்போது உணரத்தலைப்பட்டிருக்கிறாகள். ஆனால் அதனைக்கட்டாயபாடமாக ஏற்பார்களா என்பதுசந்தேகம்.

கல்வி வெள்ளைஅறிக்கையில் இந்த அச்சம் குறித்தே பல வகையிலும் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

### சகல பாடசாலைகளையும்

# சமயப்பாடசாலைகளாக மாற்றி அமைக்கவேண்டும்

## பௌத்த பிக்கு ஆலோசனை

(கண்டி)

சமூகங்களிடையேதற்போது பரந்தளவில் ஏற்பட்டுவரும் ஒழுங்கீனங்களை தவிர்ப்பதற்கு சகல தனியார் பாடசாலைகளும் அரசமயமாக்கப்பட்டு சமய பாடசாலைகளாக மாற்றப்படுவதே சிறந்த வழியாகும்.

இவ்வாறு கண்டி "கிங்ஸ்வூட்" கல்லூரியில் பௌத்த வழிபாட்டறையொன்றைத் திறந்து வைத்து வண மதிகே பன்னஸிஹமஹாநாயக்க தேர உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் ஒழுங்கீனம் தற்போது உலகளாவப் பரந்திருக்கின்றது அவற்றுடன் எமது நாட்டை ஒப்பிடுகையில் நம்நாட்டு இளைஞர்கள் சுமாராகவிருக்கின்றனர். ஆனால் மேற்கத்தியபாணியில் சிலர் தமது வாழ்க்கை முறையைக் கைக்கொள்ளப் பார்ப்பது அபாயத்தையே விளைவிப்பதாகவிருக்கின்றது. சமய அடிப்படையில் போதிக்கப்படும் கல்வியே இத்தகைய போக்கிற்கு தீர்வாகஅமையும்.

அரசாங்கம் சகல பாடசாலைகளையும் அரசமயமாக்கி எம் மதத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு பாடசாலையில்பெரும்பான்மையினராகவிருக்கின்றனரோ அதன்அடிப்படையில்பௌத்த இந்து இஸ்லாமிய கிறிஸ்தவ பாடசாலைகளென சமயப்பாடசாலைகளாக சகலவற்றையும் மாற்றவேண்டும்.

ஒரு பாடசாலையில் 70 சதவீதமானோர் பௌத்தர்களாயின் அப்பாடசாலை பௌத்த பாடசாலையாகவும், இந்துக்களாயின் இந்துப் பாடசாலையாகவும் இவற்லைப்போலவே இஸ்லாமிய கத்தோலிக்கப் பாடசாலைகளும் அமையவேண்டும் எனக்குறிப்பிட்டார்.

## அபிவிருத்திச்சங்கம் புனரமைப்பு

(பண்டத்தரிப்பு)

மாதகல் கிராமஅபிவிருத்தி சங்க புனரமைப்புப் பொதுக் கூட்டம் மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலய மண்டபத்திற் நடைபெற்றபோதுதெரிவு செய்யப்பட்ட புதுவருட நிர்வாகிகள் விபரம் வருமாறு.

போஷகர்– எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், தலைவர்– சி. நடராசா, உபதலைவர்– மு. சிங்காரசோதி, செயலாளர்– எம். பாலசிங்கம், உபசெயலாளர்– இ. நாகராஜா, பொருளாளர்– இ. தங்கராசா.

செயற்குழு உறுப்பினராக எட்டுப்பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

# “வன்செயல்களில் ஈடுபடுவதனுல் இலட்சியத்தை அடைய முடியாது”

## கருத்தரங்கில் சாவகச்சேரி ‘நவம்’

(சாவகச்சேரி)

“இளைஞர்கள் வன்செயல்களில் ஈடுபடுவதினுல் எமது லட்சியத்தை அடைந்துவிட முடியாது. வன்செயலுக்குப் பதிலாக நல்ல உளப்பக்குவத்தை அடையவேண்டும். இதற்கு ஆன்மஈடேற்றமளிக்க வல்ல சமய நடவடிக்கைகளில் கூடுதலாக ஈடுபடவேண்டும்.”

யாழ். மாவட்டதேசிய இளைஞர் சேவை மன்றத்தினரால் நடாத்தப்படும் முதல் நாள் கருத்தரங்கிங்குப் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய சாவகச்சேரிப் பிரதிநிதிதிரு.வி.என்,நவரத்தினம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கடந்த 11ம், 12ம், 13ம் திகதியாகிய மூன்று தினங்களிலும் மேற்படி கருத்தரங்கு சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி திறந்த வெளியரங்கில் நடைபெற்றது. யாழ் மாவட்டத்தின் பல்வேறு இடங்களையும் சேர்ந்தஇளைஞர்களும், யுவதிகளும் பங்கு பற்றினர்கள். யாழ் மாவட்ட இளைஞர் சேவைப் பிரதம அதிகாரி திரு எஸ். சிவானந்தமூர்த்தி தலைமை வகித்தார். திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

நான் ஒருமுறை பிரயாணம் செய்யும்போது நான்கு மலேசியா இளைஞர்களைச்சந்தித்தேன். அவர்கள் பௌத்த மதம் தொடர்பான பல்வேறு ஆன்மீகக் கருத்துக்களை என்னுேடு பகிர்ந்து கொண்டார்கள். அவர்களது பண்பும் நடத்தையும் என்னைப் பெரிதும் கவர்ந்தன. இவ்விதபண்பு மிக்க இளைஞர்களே எம்மிடையே உருவாகவேண்டும். இவ்விதம் இளைஞர்களை உருவாக்குவதில இளைஞர்பேரவை முக்கிய பங்குகொள்ளவேண்டும். தேசிய இளைஞர் சேவை மன்றம் போன்ற தேசிய ரீதியான அமைப்புக்கள் மாத்திரமன்றி மேலும் பல தன்னிச்சையான நிறுவனங்களும் இவ்விதம் இளைஞர் விருத்திக்குத் துணைபுரியவேண்டும்.

இதற்கு ஐரோப்பிய கத்தோலிக்கமன்றத்தை உதாரணமாகக்காட்டுவேன்” என்ருர்.

சாவகச்சேரி நகரமுதல்வர் திரு. சி. க. மயில்வாகனம், இலங்கை வங்கி வடபிராந்திய முகாமையாளர் திரு. எஸ். முத்துக்குமாரசாமி ஆகியோரும் உரையாற்றினர். படக்காட்சி, நாடகங்களும் இடம் பெற்றன.

# கல்விச் செயலாளரை தூதுக்குழு சந்திக்கும்!

(மாவிட்டபுரம்)

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழு ஒன்று இன்று கல்விச் சேவைக் குழுவின் செயலாளர் திரு எம். எச். எச். ஆரியரத்தினவை சந்தித்து ஆசிரியர்களது பல்வேறு பிரச்னைகளை எடுத்துக் கூற இருக்கிறது.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் திரு த. மகாசிவம் தலைமையில் செல்லும் இக் குழுவில் நிர்வாகச் செயலாளர் திரு த. அருணகிரிராசா, சிரேஷ்ட துணை நிதிச் செயலாளர் திரு எஸ். கே. சதாசிவம் ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர்.

இப் பேச்சுவார்த்தையில் ஜூலை முதலாம் திகதியில்ஆசிரிய பயிற்சியை முடித்து வெளிக்களப் பயிற்சிக்காக வெளியேறும் ஆசிரிய மாணவர்களுக்கு மாவட்டங்களை நியமிப்பதற்கான இடமாற்றத் திட்டம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படுமென வும் அவர்களுக்கு சொந்த மாவட்டத்திலேயே நியமனம் வழங்கவேண்டுமென்ற அடிப்படையில் சங்கம் வலியுறுத்துமென்றும் பொதுச் செயலாளர் திரு த. மகாசிவம் தெரிவித்தார்.

மற்றும் ஆசிரிய இடமாற்றங்கள் உட்பட மற்றும் பல்வேறு பிரச்னைகள் ுப்பேச்சுவார்த்தையில் எடுத்துக் கூறப்பட உள்ளன.

## தெருவில் நின்ற இவரை

# இரு கார்களில் வந்தவர்கள் தாக்கிக் காயப்படுத்தினராம்

[மாவிட்டபுரம்]

வீதியில் நின்ற கடற்படை உத்தியோகத்தர் ஒருவர் இரு கார்களில் வந்த பயங்கர ஆயுதங்கள் சகிதமான கோஷ்டியினுல் பலமாகதாக்கப்பட்டு யாழ், ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதில் சம்பந்தப்பட்ட கார் ஒன்று பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடற்படை உத்தியோகத்தரான டட்லி பாலசுப்பிரமணியம் என்பவரே தாக்குதலுக்குள்ளானவராவார்.

சங்கானையைச் சேர்ந்த இவரது நண்பர் ஒருவர் ஏற்கனவே சிலரால் தாக்கப்பட்டதாகவும், இதுகுறித்து முறைப்பாடு செய்ய இவரும், நண்பரும் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்திற்கு செல்ல புறப்பட்டதாகவும், வீதியில் வந்து நின்ற இவர்களை இரு கார்களில் பயங்கர ஆயுதங்களுடன் வந்த சுமார் 15 பேர் கொண்ட கோஷ்டியொன்று தடுத்திநிறுத்தி கடற்படை உத்தியோகத்தரை பலமாக தாக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலுக்கும், கத்திக் குத்துக்கும் இலக்கான இக் கடற்படை உத்தியோகத்தர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து காங்கேசன்துறைப் பொலிசில் புகார் தெரிவிக்கப்பட்டதையடுத்து விசாரணையிலீடுபட்ட பொலிசார் சங்கானையைச் சேர்ந்த காரொன்றை கைப்பற்றி பொலிஸ் பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

மற்றைய காரையும், சந்தேகநபர்களையும் தேடி பொலிசார் வலைவிரித்துள்ளனர்.

# பயிற்சி ஆசிரியரை நியமிக்கமுடிவு

(பண்டத்தரிப்பு)

மாரீசன்கூடல் கிராம அபிவிருத்திச்சங்கம், சித்திரை மேழி கிராம அபிவிருத்திச் சங்கம் ஆசியவற்றில் பனம்பொருள் கைப்பணிப் பயிற்சிகளை ஆரம்பிப்பதற்கு பயிற்சி ஆசிரியர் ஒருவரை நியமிக்கநடவடிக்கை மேற்கொள்ளப் படவேண்டும் என்று கேட்டுக்கொள்ளும் தீர்மானம் பெரியவிளான் கிராமோதய சபையின் பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

கிராமோதய சபைத்தலைவர் திரு. எஸ். பிரான்சிஸ் தலைமையில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வேறு பலதீர்மானங்களும்நிறைவேற்றப்பட்டன.

## “வவனியா மாவட்டம்:

# கல்வியைப் பொறுத்தளவில் பின்தங்கிய நிலையிலுள்ளது”

[வவனியா]

“கல்வியைப் பொறுத்த மட்டிலே வவனியா மாவட்டத்தில் நாம் பின்தங்கிய நிலையில் இருக்கின்ருேம். 840 சதுர மைல்நிலப்பரப்பைக்கொண்ட வவனியா மாவட்டத்தில் 110 தமிழ் கல்வி நிலையங்களும், 22 சிங்கள கல்வி நிலையங்களும் இயங்கி வருகின்றன. சுமார் 22000 மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர் என்று வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் தெரிவித்தார்.

ஆறு லட்சம் ரூபா செலவில் வவனியா தமிழ் மகாவித்தியாலய மாணவரின் விடுதியை திறந்து வைத்துப் பேசுகையிலேயே வவனியா எம். பி. மேற்கண்டவாறு தெரிவித்தார். திரு. சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது;

“பணம் படைத்த பெற்ருேரின் வயிற்றில் பிறக்காத கிராமப்புற ஏழைப் பட்டாளியின் விவசாயிகளின் குழந்தைகள் இந்த விடுதியைப் பயன்படுத்தி கல்வியில் முன்னேற வேண்டும்.

ஆசிரியர். தளபாடம், கல்விக்கு வேண்டிய இதர தேவைகள் அத்தனையும் பற்ருக்குறையாக கல்வியைப் பொறுத்த மட்டில் பின்தங்கிய நிலையில் இருக்கின்ற எமது மாவட்டத்தில் கல்விச் சேவையில் இருக்கின்ற ஆசிரியர் தாம் செய்யும் சேவையை எமது இனத்துக்கு செய்கின்ற பெரும் தொண்டு என்று நினைத்து தங்கள சேவையை ஆற்றவேண்டும்” என்ருர்.

வவனியா பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. ஸி. சிவபாதம், மாவட்ட அரசாங்க அதிபர்திரு. கே பி. லோகேஸ்வரன், பாடசாலைஅதிபர் திரு. சிவஞானம், மற்றும் பலரும் உரையாற்றினுர்கள். [க]

## மகாபாரத விரிவுரை பூர்த்தி

[சுழிபுரம்]

சுழிபுரம் நடேசன் சிவசண்முகமூர்த்தி கடந்த பத்துத் தினங்களாக தொல்புரம் மத்தி அம்மன் கோவிலில் மகாபாரத விரிவுரையை நிகழ்த்தி பூர்த்தி செய்துள்ளார்.

## ஜப்பானிய பிரதிநிதிகளுக்கு அனுமதிமறுப்பு

டோக்கியோ, ஜூன் 14

ஆயுதப்பரிகரணம் குறித்த ஐ. நா.வின் இரண்டாவது விசேஷ கூட்டத்துடன் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் பங்குபற்ற அமெரிக்காவுக்குள் நுழைவதற்காக ஜப்பானிய பொதுமக்கள் பிரதிநிதிகளுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் விஸா வழங்க அமெரிக்க ராஜ்ய இலாகா மறுத்தது குறித்து, தகவல் சாதன சங்கங்களது கூட்டுக் காங்கிரஸ் வன்மையான கண்டனம் தெரிவித்துள்ளது.

# இன்றைய பலன்

ஆனி மாதம் 1-ம் திகதி

செவ்வாய்க்கிழமை

(15—6—82)

**மேடம்:** இதயப்படுதாவில் இன்பக்கூத்து, வாழ்க்கை சில காரியங்கள் நிறைந்ததாக இருக்கும், கற்றதனுல் பயன் இன்று கைமேல் கிடைக்கும். நுட்பமான வேலைகளில் ஈடுபடுவீர்கள்.

**இடபம்:** தூக்கம் விழிகளைத் தழுவ மறுக்கும். கடந்தகால எண்ணங்கள் அலைமோதும். அடுத்துக்கெடுப்பதற்கு சிலர் முனைவர். சகோதர வழியால் சஞ்சலப்படக்கூடிய செய்திக்கு இடமுண்டு.

**மிதுனம்;** எண்ணம் போல் வாழ்வு இன்று மலரும். சமூகத்தில் மதிப்பு உயரும். நண்பர்கள் உதவுவதற்கு முன்வருவார்கள். சாந்தகுணம் சிறப்பைத் தேடித்தரும். நல்ல தினம்.

**கடகம்:** புத்திக் கூர்மையுடன் புதிய எண்ணங்கள் தலைதூக்கும். புத்திரர்களால் புகழும் கிடைக்கும். இறை நம்பிக்கையுடன் இல்லத்தின் அமைதி தவழும். நல்ல நாள்.

**சிங்கம்:** நடவடிக்கைகள் அனைத்தும் இன்று வேவுபார்க்கப்படும். தொழில்துறையில் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு சதி நடைபெறலாம்.

**கன்னி:** காதல் விவகாரங்கள் தலைதூக்கும். இனிமையான சம்பவங்கள் இடம் பெறும். களஸ்திர வழியால் பொருள் வரவுக்கும் இடம் ஏற்படும். கண்ணியமான தினம்.

**துலாம்:** அரச டயத்துக்கு இடம் உண்டு. வழக்கு விவகாரங்களில் மாட்டிக் கொள்ள வேண்டாம். மின்னியல், பொறியியல் பகுதிகளில் கடமையாற்றுபவர் கவனம்வேண்டும்.

**விருச்சிகம்:** கைகொடுத்து உதவுவதற்கு தந்தை முன்வருவார். காரியச் சித்தியும் கிட்டும். நீண்டநாள் எதிரிகள் இன்று மீண்டும் இணைவர்கள்.

**தனு:** தொழில் துறையில் நல்ல மாற்றங்கள் ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். நண்பர்கள் மூலம் புதிய தொடர்புகள் ஏற்படும்.

**மகரம்:** புதுமையான சம்பவங்கள் நடைபெறும். சிலருக்கு அதிர்ஷ்ட இலாபங்களுக்கும் இடம் உண்டு. விருந்தினர்கள் வருகை உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

**கும்பம்:** தானிய நஷ்டத்துக்கு இடமுண்டு. வியாபாரிகள் புதிய முதலீடுகளைத் தவிர்த்துக் கொள்ளவும். ஏமாற்றத்துக்கு இடம் அளியாது நடக்கவும்.

**மீனம்:** எதிலும் தயக்கநிலை தென்படும். நண்பர்கள் குறை கூறுவார்கள். பொருளாதாரத் துறையில் மந்த நிலை தென்படுகிறது. சுமாரான நாளாகும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## சங்கரத்தை அபிவிருத்திசபை

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டைத்தொகுதியிலுள்ள சங்கரத்தை கிராமத்தை சமூக, பொருளாதாரத் துறையில் அபிவிருத்தி செய்யுமுகமாக கொழும்பில் சங்கரத்தைக் கிராம அபிவிருத்தி சபை என்ற அமைப்பு அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இச்சபையின் தலைவராக பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி அதிபர் திரு.எஸ் சங்கரலிங்கம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். சங்கரத்தையில் மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து இச்சபை வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசுவுடன் தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவட்டுக்கோட்டை எம்பி சபையினரிடம் உறுதியளித்துள்ளார்.

# ஒரு பாடசாலையின் கதை இது

[கிளிநொச்சி]

பரந்தன் கல்வி அதிகாரி பிரிவில் உள்ள கோவில்வயல் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, கடந்தஇரண்டு வருடங்களாக ஒரேஒரு ஆசிரியருடன் மட்டும் இயங்கிவருகிறது.

ஐந்து வகுப்புகளை கொண்ட இந்தப்பாடசாலையில் உள்ள இந்த ஆசிரியரும் விடுமுறையில் சென்ருல் பாடசாலையும் மூடப்பட்டுவிடும்.

பாடசாலைக்குச்சொந்தமான கிணறும் இடிந்து தூர்ந்த நிலையில் காணப்படுகின்றது.

மாணவர்கள் தூர இடங்களுக்குச் சென்றே தண்ணீரைப் பெற்று வருகின்றனர்.

இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு கோரி பாடசாலையின் அபிவிருத்திச் சங்க செயலாளர் திரு. ஜீ. எம். சுப்பிரமணியம் கல்விஅமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்கா, கிளிநொச்சிஎம் பி திரு.வி. ஆனந்தசங்கரி, வட்டாரக்கல்வி அதிகாரி திரு. எஸ். தங்கராசா ஆகியோருக்கு தனித்தனியே மகஜர்களை அனுப்பிவைத்துள்ளார்.

# மன்ஞர் மாவட்ட நீர்ப்பாசனத் திட்டங்கள்

[மன்ஞர்]

தேசிய இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்புச் சேவைத் தேசியத் திட்டத்தின் கீழ் மன்ஞர் மாவட்டத் தேசிய இளைஞர் சேவை மன்ற அலுவலகம் மன்ஞர் மாவட்டத்தில் 5 நீர்ப்பாசனம் தொடர்பான வேலைத் திட்டங்களை மேற்கொள்ளுமென மன்ஞர் மாவட்டத் தேசிய இளைஞர் சேவை மன்ற அலுவலர் ஜனுப் ஏ. சி. ஏ. கபூர் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:

“இசமால தாழ்வுக்கிராமத்தில் ஏற்கனவே ஒரு நீர்ப்பாசனத் திட்டம் செயற்பட்டு வருவதாகவும், இத்திட்டத்தின் மூலம் 40 பேர் கொண்ட இளைஞர், யுவதிகள் நீர்ப்பாசன வாய்க்கால் ஒன்றை அமைத்து வருகின்றனர். வஞ்சியன்குளம் கிராமத்தில் மற்றுமொரு நீர்ப்பாசன வாய்க்கால் அமைக்கும் வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும். இவ்வேலையில் 50 பேர் கொண்ட இளைஞர், யுவதிகள் ஈடுபடுத்தப்படுவார்கள். இவ்வேலைத் திட்டத்தின் மூலம் 200 ஏக்கர் விவசாயத்திற்கு நீர்ப்பாசன வசதி வழங்கக் கூடியதாக இருக்கும்.

“இரண்டரை மாதங்கள் நடைபெறும் இவ்வேலைத்திட்டத்தில் ஈடுபடுவோர்க்குத் தினமும் 8 ரூபா வேதனமாக வழங்கப்படும். இதேபோல் திருக்கேதீஸ்வரம் கள்ளிக்கட்டைக்காடு, மாவிலங்கேணி ஆகிய கிராமங்களிலும் 3 நீர்ப்பாசன வேலைத் திட்டங்கள் விரைவில் ஆரம்பிக்கப்படும்” எனவும் அவர் தெரிவித்தார்.

# "வட பகுதியில் முதல்தர கனிஷ்ட பாடசாலையாக மாற்றிஅமைப்பேன்!" விளையாட்டு விழாவில் கிளிநொச்சி எம். பி. ஆனந்தசங்கரி

[கிளிநொச்சி]

"நாம் எதற்கும் அரசின் உதவிகளை எதிர்பார்க்காமல் சுயமுயற்சி மூலம் எமது பகுதிகளை முன்னேற்ற முன்வர வேண்டும்" என்று கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலய வருடாந்த விளையாட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட உரையாற்றுகையில் கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி கூறினார்.

கிளிநொச்சி றெட்றிக்கோ விளையாட்டரங்கில் வித்தியாலய அதிபர் திரு எஸ்.ராஜேந்திரம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. வி ஆனந்தசங்கரி மேலும் கூறியதாவது:

"கிளிநொச்சித் தொகுதியில் மிகவும் பழமைவாய்ந்ததும், முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டதுமான இவ்வித்தியாலயத்தின் தேவைகளைக் கூடுமானவரை நிறைவேற்றியுள்ளேன். வடபகுதியில் கனிஷ்ட பாடசாலைகளில் அதிகளவு மாணவர்களைக் கொண்ட இப்பாடசாலையின் இடநெருக்கடியை நீக்கும்முகமாக இரண்டு மாடிக் கட்டிடமொன்றை நிறுவுவதற்கு ஒழுங்குசெய்துள்ளேன். அதுமட்டுமல்லாமல் இங்கு கல்வி பயிலும் மாணவர்களின் நலனை முன்னிட்டு விரைவில் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றையும் அன்பளிப்புச் செய்யவுள்ளேன் நகரின் மத்தியில் அமைந்துள்ள இவ்வித்தியாலயத்தை மேலும் அபிவிருத்தி செய்து, வடபகுதியிலேயே முதல்தரக் கனிஷ்ட பாடசாலையாக மாற்றியமைப்பதற்கு இப்பகுதி வர்த்தகர்களும் விவசாயிகளும் முன்வரவேண்டும்" என்றார்.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு சுப்பிரமணியம், முன்னுள் பட்டினசபைத் தலைவர் திரு. இ. கிருஷ்ணராசா, வட்டாரக் கல்வியதிகாரி திரு. எஸ். தங்கராசா, கிளிநொச்சி கொத்தணிப்பாடசாலை அதிபர் திரு. இரா. சின்னத்தம்பி உட்படப் பலர் உரையாற்றினர்கள்.

# மாணவர் மத்தியில் தீயசக்திகள் ஊடுருவல்!

## கல்வி அமைச்சு எச்சரிக்கை

(மாவிட்புரம்)

பாடசாலை மாணவர்களிடையே சில தீய சக்திகள் ஊடுருவி அவர்களை அரசுக்கெதிராகத்தூண்டி தவறான வழிகளில் ஈடுபடுத்த முனைவதால் இது குறித்து மிகுந்த கண்காணிப்பாக இருக்குமாறு சகல பாடசாலை அதிபர்களும் பணிக்கப்பட்டுள்ளனர்.

கல்வியமைச்சின் நிரந்தரச் செயலாளர் இதுகுறித்த சுற்றுநிருபம் ஒன்றை பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி இது குறித்து வலியுறுத்தியுள்ளார்.

அச்சுற்றுநிருபம் மேலும் தெரிவிப்பதாவது:.

மனித உரிமைகள் இயக்கம் என்ற பெயரில் சில தீய சக்திகள் பாடசாலைமாணவர்களிடையே ஊடுருவமுயல்கின்றன இவை மாணவர்கள் மத்தியில் தவறான எண்ணங்களை வளர்த்து அவர்களை தீயவழிகளில் ஈடுபடுத்த முனையலாம். அரசுக்கெதிராகவும் மாணவர்களைத் தூண்டிவிடலாம். இத்தீயசக்திகள் குறித்து மிகுந்த கண்காணிப்புடன் செயல்படவேண்டும். மாணவர்கள் மத்தியில் இச்சக்திகள் ஊடுருவாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்" என்று சுற்றுநிருபம் கூறுகிறது.

இதனையடுத்து பாடசாலை அதிபர்கள், மாணவர்களது நடத்தைகள் குறித்து கண்காணித்துவருகிறார்கள். தவறான வழிகளில் அவர்கள் ஈடுபடாமல் இருக்கவேண்டிய ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர்.

## குடிநீர் பிரச்சினை தீரும் அறிகுறி

(கிளிநொச்சி)

பூநகரி மகாவித்தியாலய மாணவர்கள் அனுபவித்து வந்த குடிநீர்ப்பிரச்சினை விரைவில் தீர்க்கப்படவுள்ளது. கிளிநொச்சி எம்.பி.திரு.வீ. ஆனந்தசங்கரி இவ்வித்தியாலயத்திற்கு குழாய் மூலம் நீர் வழங்குவதற்கான திட்டத்துக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் ஒதுக்கீடு செய்துள்ளார். இதற்கான வேலைகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளதாக திரு. ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

## தற்கொலைசெய்தவர் எழுதிவைத்த கடிதம்

[சாவகச்சேரி]

"என்னைப்பற்றியாரும் கவலைப்படத்தேவையில்லை. என் சாவுக்கு நானேபொறுப்பு. எல்லாரும் நன்றாக இருங்கள். என்நண்பர்கள் எல்லோரையும் விட்டுசெல்லுகின்றேன். எவர்மீதும் சந்தேகம்கொள்ள வேண்டாம்"

சாவகச்சேரி, பெரிய மாவடியைச் சேர்ந்த சி.சிங்கராசா என்ற 16 வயது மாணவன் மேற்கண்டவாறு கடிதம் எழுதிவைத்துவிட்டு நஞ்சு மருந்து அருந்தித் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

சம்பம் நடந்த இடத்தில் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. என் தர்மேந்திரன், சாவகச்சேரிப் பொலிஸ் உத்தியோகத்தர் சூரியப்பிரகாசத்தின் உதவியுடன் விசாரணையை மேற்கொண்டார், சாட்சிகளாகக் காலமானவரின் தந்தை சூ சின்னர், பொன்னர் மோகனானந்தன் ஆஜர் செய்யப்பட்டனர். காலமானவர் எழுதிய கடிதமும் கையளிக்கப்பட்டது. சாட்சிகளைப் பதிவுசெய்த மரணவிசாரணை அதிகாரி என். தர்மேந்திரன் தற்கொலை என்று தீர்ப்பளித்தது.

## அபிவிருத்தி கருத்தரங்கு

(கிளிநொச்சி)

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பகுதியில் உள்ளமாதர் கிராமமுன்னேற்றச்சங்க பிரதிநிதிகளுக்கான அபிவிருத்தி கருத்தரங்குகள் உதவி அரசாங்க அதிபர் திரு.வைத்திலிங்கம் தலைமையில் சடந்த ஒரு வாரமாக நடைபெற்று வருகிறது. பூநகரி பலநோக்கு கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் நடைபெற்றுவரும் இக்கருத்தரங்கில் அறுபத்தைந்து யுவதிகள் பங்குபற்றி வருகின்றனர்.

# பனம்பொருள் கைப்பணிப் பயிற்சி வகுப்பு

(பண்டத்தரிப்பு)

யாழ். தேசிய கூட்டுறவுச் சபை பனம்பொருள் அபிவிருத்தி சபையின் ஒத்துழைப்புடன் யாழ்.மாவட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மகளிர் குழுக்கள் பங்குபற்றும் பனம் பொருள் கைப்பணி பயுற்சி வகுப்பொன்றை இம்மாதம் 19–ம் திகதி தொடக்கம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பிக்கவுள்ளது.

இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளும் பொருட்டு யாழ். மாவட்டத்திலுள்ள 22 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மகளிர் குழுக்களிலிருந்து தலா மூன்றுபேர் வீதம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஒன்பது மாத காலம் நடைபெறவுள்ளஇந்த பனம்பொருள் கைப்பணி பயிற்சி வகுப்பில் பங்குபற்றுபவர்களுக்கு இலவசபயிற்சியளிக்கப்படுவதுடன் பயிற்சி முடிவில் சான்றிதழ்களும் வழங்கப்படும். இதற்கான ஒழுங்குகளை யாழ் தேசிய கூட்டுறவுச் சபையின் செயலாளர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம், யாழ். கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. எஸ். ஞானப்பிரகாசம் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

## பயிற்சி வகுப்பு

(மன்னார்)

தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கத்தின் மகளிர் குழுவின் அனுசரணையுடன் மன்னார் மாவட்ட தேசிய கூட்டுறவு சபையும், கூட்டுறவுத்திணைக்களமும் இணைந்து மன்னார் மாவட்டத்திலான மகளிர் பயிற்சி வகுப்பொன்றை மன்னார் தேசிய கூட்டுறவு சபை மண்டபத்தில் நடந்தன.

நானாட்டான் ப.நோ.கூ.சங்கத்தலைவர் திரு.எஸ். மரியாம்பிள்ளை தலைமையுல் நடைபெற்ற இப்பயிற்சி வகுப்பை மன்னார் கூட்டுறவு அபிவிருத்திஉதவிஆணையாளர் திரு.எஸ்.தில்லைநடராசா ஆரம்பித்து வைத்தார்.

இப்பயிற்சி வகுப்பில் சவர்க்காரம், விளாம்ழஜாம், அப்பளம் என்பன தயாரிக்கும் முறைபற்றிய செய்முறைகள் இடம்பெற்றன. [வெ]

## ஏர்பூட்டு விழா

(மன்னார்)

மன்னார்–உயிலங்குளம் வயலில் பொதுமக்களின் உதவியுடன் விவசாய இலாகாவினால் ஏர்பூட்டு விழா நடத்தப்பட்டது

இவ்விழாவில் மன்னார் எம்.பி திரு.பி.எஸ். சூசைதாசன், மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. பி.எம்.செபமாலை, மன்னார் அரசாங்க அதிபர் டி.வாமதேவன், மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. வி. கைலாசபிள்ளை, மன்னார்திட்டமிடல் பணிப்பாளர் திரு.எஸ். தீவகலால், மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. கோபாலரட்ணம், மன்னார் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் ஜனுப் எம். சி, எம். முஸ்தபா, சமநல சேவை உதவி ஆணையாளர் திரு. கணேஸ், மன்னார் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.எஸ். தில்லைநடராசா ஆகியோர்உட்படப் பலர் கலந்து கொண்டனர், (வெ)


வெஸ்லி மானிப்பாய்
17-6-82 வரை
தினசரி 6-15, 9-15
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர் -ஜெய்சித்ரா
வண்டிக்காரன் மகன்
[இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி)

ஹரன் யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - பாரதி
உனக்கும் எனக்கும்
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி

ராணி (யாழ். நகர்) தினசரி 5 காட்சிகள்
Force 10 From Navarone

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
லொறி ட்ரைவர் ராஜாக்கண்ணு

ரியோ (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்
ராஜபார்வை

சாந்தி (யாழ்நகர்) 10-30, 2-30, 6-15, 9-45
4-வது வெற்றி வாரம்

கமல் (இரட்டைவேடம்)
சுஜாதா, அம்பிகா, சுவப்னு, தேங்காய், தங்கவேலு, நாகேஷ்.
கடல் மீன்கள்
—கலர்—

ராஜா [யாழ்ப்பாணம்] தினசரி 4காட்சிகள்
வெற்றிகரமான 7வது வசூல் வாரம்
ரஜனிகாந் சுஜாதா விஜயன் கராத்தே மணி ரதி
அன்புக்கு நான் அடிமை
[ஈஸ்மன் கலர்]

மனோகரா (யாழ்ப்பாணம்)
வெற்றி முரசுகொட்டும் 5-வது வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
மாதர்கள் கூட்டம் அலைமோதுகிறது
கார்த்திக் ராதா தியாகராஜன் நடித்த
அலைகள் ஓய்வதில்லை
(கலர்)

14th & 15th
றீகல் (யாழ்நகர்) தினசரி 5 காட்சிகள்
PETER SELLERS HERBOT LOM in
Pink Panthar Strike Again
(Comedy-Colcr)
18-6-82 முதல் ஸ்ரீதரின்:
மோகனப் புன்னகை

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்—ஜெயசித்திரா நடித்த
இன்ஸ்பெக்டர் மனைவி
Coming soon! BRUCE LEE in
THE GAME OF DEATH

ஸ்ரீதர் (யாழ்.நகர்)
10-30, 2-00, 6-00, 9-30
The Other Side of Midnight
கொழும்பில் 100 நாட்களுக்குமேல் ஓடி ஆங்கிலப்படத்தில் கூடிய வசூலைக்கொடுத்த அதி உன்னத சித்திரம்

# கூட்டுறவுச்சங்க இயக்கத்துக்கு உதாரணமாகத்திகழும்சங்கம்

## ஆண்டுவிழாவில் 'அமிர்' பாராட்டு

(சங்கானை)

''மிகக் குறுகிய 10 ஆண்டு காலத்தில் இத் தொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்கம் ஒரு காணியையும் சங்கக் கட்டிடத்தையும் புதிய வாகனத்தையும் சொந்தமாகப் பெற்று போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலையையும் அமைத்து வட பகுதியில் கூட்டுறவுச்சங்க இயக்கத்திற்குச் சிறந்த உதாரணமாகத்திகழ்கிறது'' என எதிர்க்கட்சி முதல்வர் திரு அ. அமிர்தலிங்கம் சங்கானையில் வட்டு-தொகுதி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச்சங்க 10வது ஆண்டு விழாவின் புதிய சங்கக் கட்டிடத்தைத் திறந்து வைத்துப்பேசுகையில் கூறினார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில் இதுபோன்ற கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்காக தம்மால் இயன்ற ஒத்தாசையையும் உதவியையும் வழங்குவதாகவும் இச்சங்கத்தின் தலைவரும் சமாசத்தின் தலைவருமான திரு. சு. நடேசுவை மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தலில் நிறுத்தி வெற்றியீட்டினேம்என்றும் திரு. நடேசுவின் வெற்றி இச்சங்கத்தின் வெற்றியேயாகும் என்றும் கூறினார்.

கடந்த வருடம் மாவட்ட அபிவிருத்திச்சபையில் நிறைவேறிய தீர்மானத்தின்படி 10 லட்சம் ரூபா செலவில் வடி சாராயத் தொழிற்சாலை ஒன்று விரைவில் யாழ் மாவட்டத்தில் நிறுவுவதற்கு ஆவன செய்து கொடுக்க இயன்றவரை உதவி செய்வதாகவும் இத்திட்டத்தால் சீவல் தொழிலாளர்களின் வாழ்வும் அவர்களது சங்கங்களும் மேலும் நன்மை பெறுமெனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இவ்வைபவத்தில் பங்கெடுடுத்து மங்கள விளக்கேற்றி வைத்த வட்டுக்கோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் தலைவரும் சமாசங்களின் செயலாளருமான திரு. க நடராசாவின் சேவையைப் பாராட்டிப்பேசி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

உடுப்பிட்டி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. இராஜலிங்கம் சங்கக் கட்டிடத்திரையை நீக்கம் செய்து சொற்பொழிவாற்றினர். கூட்டுறவுக் கொடியை கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. வேலாயுதம் பிள்ளை ஏற்றிவைத்தார்.

விழாவையொட்டி காலையில் நடைபெற்ற 5 மைல் மரதன் ஓட்டப்போட்டியில் திரு. இ திருநாவுக்கரசு, திரு. இ தியாகராசா, திரு. பா. பாலகுமார் முறையே முதலாம், இரண்டாம், மூன்றும் இடங்களையும், 50 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டியில் திரு. என். இராஜன், திரு அ. துரைமணி, திரு வி. அழகராஜா ஆகியோர் முறையே முதலாம், இரண்டாம், முன் இடங்களையும், பெண்களுக்கான 10 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டியில் செல்வி சி. கௌரி, செல்வி மா. புஸ்பலதா, செல்வி பொ. தயாவதி, ஆகியோர் முறையே முதலாம் இரண்டாம் மூன்றும் இடங்களையும் பெற்றனர்.

மாலையில் நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் சங்கானை ஐக்கிய நலன்புரிச் சங்கம் வெற்றிமீட்டியது. கயிறு இழுவைப் போட்டியில் சங்க அங்கத்தவர்கள் கோஷ்டி வெற்றிபெற்றது காலை தொடக்கம் மாலை வரை நடந்த இச்சங்க நிகழ்ச்சிகளைக் கண்டுகழிக்கச் சகல கிளைச் சங்கங்களும் இத்தினம் மூடப்பட்டிருந்தன.

### கூட்டுறவு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காரம் இவ்வழக்கை விசாரணை செய்ய இந்ததொழில் நீதிமன்றத்திற்கு நியாயாதிக்கம் இல்லைஎன தெல்லிப்பளை கூட்டுறவு ஆஸ்பத்திரிசபை சார்பில், பூர்வாங்க ஆட்சேபனையொன்று கடந்ததவணையின் போது, தெரிவிக்கப்பட்டது.

இந்தவழக்கை விசாரணை செய்ய, தொழில்நீதிமன்றத்திற்கு நியாயாதிக்கம் உண்டென, விண்ணப்பதாரர் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

நேற்று தொழில்நீதிமன்றத் தலைவர் திரு. எஸ். என். குருசாமிபூர்வாங்கஆட்சேபனையை நிராகரித்து இந்த வழக்கை விசாரணைசெய்ய இந்நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கம் உண்டென தீர்ப்பளித்தார்.

தீர்ப்பில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: தொழில் நீதிமன்றத்திற்கு தொழிலாளர் பிணக்கு சட்டத்தின் 31 (பி) 1) (ஏ) என்ற [illegible] உள்ள நியாயாதிக்கத்தின்படி வேலைநீக்கம் செய்யப்பட்ட ஒருவர் நிவாரணம் கோரி தொழில் நிதிமன்றத்திற்கு விண்ணப்பிப்பதை 1972-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 12-ம் இலக்கக் கூட்டுறவுச் சட்டத்தின், 39-ம் ஷரத்து தடைசெய்யவில்லை, அதற்கான காரணம் மேற்படி 39-ம் ஷரத்து கூட்டுறவுச் சங்கத்தில் வேலைக்கு அமர்த்துபவர் என்ற கேள்தாவிலும், அங்கு வேலைசெய்கின்ற ஊழியருக்கு உள்ள தொழில் தகராறுகளை மட்டுமே விசாரணை செய்ய தொழில் நீதிமன்றத்திற்கு நியாயாதிக்கம் இல்லை என்பதைத் தெளிவாக ஷரத்தில் காட்டப்பட்டுள்ளது என்றார்.

தெல்லிப்பளை கூட்டுறவு ஆஸ்பத்திரிசபை சார்பில் சட்டத்தரணி எம். கே. சுப்பிரமணியம் இன்று விசாரணைக்குத் தயாரில்லை எனத் தெரிவித்ததைத் தொடர்ந்து விசாரணை ஆகஸ்ட் 31-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (க)

### சேர். வைத்திய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுவாமியின் உருவப்படத்தைத் திரைநீக்கம்செய்துவைத்தார்.

சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமியைக் கௌரவிக்குமுகமாக, அஞ்சல் தொலைத்தொடர்பு அமைச்சு 50 சதம் பெறுமதியுள்ள இந்த முத்திரையை நேற்று வெளியிட்டுள்ளதுடன், துரைசுவாமியின் வாழ்க்கை வரலாறு அடங்கிய முத்திரைச் செய்தித்தாள் ஒன்றையும் விநியோகித்தது.

[5-ம் பக்கம் பார்க்க]

### புதிய மன்ன...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பட்டிருக்கும் இளவரசர் பாத்திற்கு பேராதரவையும், விசுவாசத்தையும் பெரும் திரளான மக்கள் மன்னரின் மாளிகைக்குச்சென்று தெரிவித்துக் கொண்டனர்.

அப்போது இளவரசர் அப்துல்லாவும் மன்னரின் மாளிகையிலிருந்தார். (வெ)

## ஆரியரத்னவுக்கு ஜனாதிபதி பாராட்டு

(கொழும்பு)

பெல்ஜிய அரசின் 20 லட்சம் ரூபா பரிசுத் தொகையைப் பெறவுள்ள இலங்கை சர்வோதய இயக்கத் தலைவர் டாக்டர் ஏ. ரி. ஆரியரத்னவையும் அவரது குடும்பத்தவரையும் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்று ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்துப் பாராட்டினர். (வெ)

### ஆனந்தி....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வழக்கில் 81 ஆகஸ்ட் 28-ம் தேதி சட்டவிரோதமாக கூட்டம்கூடி சுண்டிக்குளியில், ஜேக்கப் ஆனந்தியை வெட்டிக்கொலைசெய்ததாக அந்தனி செல்வம், அருளானந்தம் விஜயகுமார், கஸ்பார் அன்ரன், வெலிச்சோர்பிள்ளை மரியநாயகம், அன்ரன் ரெஜி பெர்னண்டா, ஜேக்கப் ராதிகா ஆகியோர்மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

17 சாட்சிகளை பொலிஸார் அழைத்ததில் 9 சாட்சிகள் சாட்சியமளித்ததைத்தொடர்ந்து எதிரிதரப்பு சட்டத்தரணிகளான, எஸ். லோகேஸ்வரன், ஜிம்மி ராசரத்தினம் ஆகியோர் சாட்சியங்களில்லாததினால், எதிரிகளை விடுதலைசெய்யுமாறு வாதிட்டனர்.

இதைத்தொடர்ந்து நீதவான் எதிரிகளை விடுதலைசெய்தார். 1-ம், 2-ம், 3-ம், 4-ம், 5-ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி எஸ். லோகேஸ்வரனும், 6-ம் எதிரிசார்பில் சட்டத்தரணி ஜிம்மி ராசரத்தினமும் ஆஜராஞர்கள். [மா]

## தென்னிலங்கை கூட்டுறவாளர் இன்று யாழ். விஜயம்

[யாழ்ப்பாணம்]

கூட்டுறவுமூலம் நல்வாழ்வினை ஏற்படுத்துவது தொடர்பான தேசியக் கருத்தரங்கில் கலந்துகொள்ள தென்னிலங்கையைச்சேர்ந்த 30 கூட்டுறவாளர்கள் இன்று நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

மகளிர் குழு திட்டப்பணிப்பாளர் செல்வி ஜயந்தா தென்னக்கோன் தலைமையில் இக்குழுவினர் வருகிறார்கள்.

நல்லூர் ப. நோ. கூ. ச மகளிர் குழுவினரால் முத்துத்தம்பி சைவ அனாதை இல்ல மாணவர்களுக்கு இலவசமாக அளிக்கப்படும் ஆங்கில தையல் பயிற்சி வகுப்புக்களையும், யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்களுக்காக டாத்தப்படும், தேநீர்ச்சாலையையும். பாலசிங்கம் விடுதி மாணவர்களின் உணவுச்சாலையையும் பார்வையிடுவர். சங்கம் இவர்களுக்கு இராப்போசன விருந்தளிக்கும். (மா)

## பெய்ரூட் விமானநிலையம் ஆக்கிரமிப்பு

பெய்ரூட், ஜூன். 14

பெய்ரூட்டின் சர்வதேச விமான நிலையத்தை இஸ்ரேலியத்துருப்புக்கள் ஆக்கிரமித்துள்ளதாகஅறிவிக்கப்பட்டது.

சிரியாவின் பலடாங்கிகளை தமது துருப்புக்கள் நாசப்படுத்தியதாக இஸ்ரேலின் இராணுவஅதிகாரியொருவர் தெரிவிததார். (வெ)

# யாழ். அபிவிருத்திசபை: நிதி ஒதுக்கீடுபரிசிலனை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையின் 82-ம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதிஒதுக்கீடுகள் குறித்து யாழ். செயலகத்தில் நேற்று பரிசீலனை செய்யப்பட்டது.

யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயகோன் தலைமையில் எதிர்க்கட்சிமுதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் உட்பட யாழ். மாவட்ட எம் பி. க்களில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசுவும், கிளிநொச்சி எம் பி திரு வி. ஆனந்தசங்கரியும் தவிர மற்றைய எம். பி.க்களும், அபிவிருத்திசபை உறுப்பினர்களும் திட்டமிடல் அதிகாரியும் கலந்துகொண்டு ஆராய்ந்தனர்.

மகாதேவா தாய்போதி அமைப்பதற்கு மேலும் அதிக நிதி ஒதுக்கப்பட்டது.

பனம்சாராய வடிசாராய தொழிற்சாலைக்கு பத்து லட்சம் ரூபா ஏற்கனவே ஒதுக்கப்பட்டிருந்து. இந்த நிதி ஒதுக்கீட்டிற்கான வேலைகளை மேலும் துரிதப்படுத்துவதற்கும், அவதானிப்பதற்கும் என்று உடுப்பிட்டி எம். பி. திரு கே. ராசலிங்கம் தலைமையில் ஒருகுழு தெரிவுசெய்யப்பட்டது.

இக்குழு அழைப்பாளராக யாழ். திட்டமிடல் அதிகாரி திரு. எஸ் சிவதாசனும், பனம் பொருள் அபிவிருத்தி சபை தலைவர் திரு. க, நடராசாவும் பனம் பொருள் கூட்டுறவு ஆணையாளர் திரு. சி. வேலாயுதபிள்ளையும் அடங்குவர்.

அச்சுவேலி அரசினர் ஆஸ்பத்திரியில் 'வாட்' அமைக்கும் வேலைகளை இவ்வருஷத்துக்குள் முடிப்பதற்கு கோப்பாய் எம். பி. திரு. எம். ஆலாலசுந்தரம், தனது தொகுதி நிதி ஒதுக்கீடுலிருந்து ஒருலட்சத்து 58 ஆயிரம் ஒதுக்குவதற்கு ஒப்புக் கொண்டுள்ளார். (மா)

## சிவசண்முகமூர்த்தி சகோதரர்மீது விசாரணை

[பண்டத்தரிப்பு]

யாழ். நகரிலுள்ள அச்சகம் ஒன்றில் மர்மமான முறையில் சுட்டுக்கொல்லப்பட்ட சுழிபுரத்தைச் சேர்ந்த சதாசிவம் சிவசண்முகமூர்த்தியின் இளைய சகோதரர்ஒருவரை இராணுவத்தினர் மாதகலிலுள்ள இராணுவமுகாமிற்கு அழைத்துச்சென்று நீண்டநேரம் விசாரணை செய்தனர்.

இந்தஇளைஞர்விசேட சேவை உத்தியோகத்தராக கடமையாற்றிவருவது குறிப்பிடத்தக்கது.

## மாவைசேனாதிராசா, காசி ஆனந்தன்

# லண்டன் செல்வார்கள்

[யாழ்ப்பாணம்]

லண்டன் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கிளையினர் ஒழுங்கு செய்துள்ள தமிழீழ சோஷலிச விழாவும் தமிழ் தியாகிகள் நினைவுதினமும் இம்மாதம் 27ம் திகதி லண்டன் மாநகரில் இடம்பெறவுளது.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் பொருட்டு தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர் நாயகமும் எதிர்க்கட்சி முதல்வருமான திரு. அ. அமிர்தலிங்கம், தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளர் திரு. மாவை சேனாதிராசா, கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோர் லண்டன் செல்லவுள்ளனர்.

மேற்கு ஜெர்மனி பிரான்சு, அமெரிக்கா இந்தியா போன்ற நாடுகளில் இருந்தும் அதிகமான பிரதிநிதிகள் மேற்படி வைபவத்தில் பங்கு கொள்ளவுள்ளனர்.

தமிழ் நாட்டிலிருந்து திரு. இரா. ஜனார்த்தனம். திரு. செஞ்சி இராமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

விழாவுக்கான பூர்வாங்க ஏற்பாடுகளை த. வி. கூட்டணி கிளையினர் மேற்கொண்டுவருகின்றனர்.

## சிவகுமாரன் நினைவு தினம்

[யாழ்ப்பாணம்]

சிவகுமாரன் நினைவுதினக் கூட்டம் உரும்பராய் சந்தை மைதானத்தில் சிவகுமாரன் சிலைக்கருகாமையில் திரு. எஸ். தர்மலிங்கம் தலைமையில் இன்று பிற்பகல் நடைபெறவுள்ளது.

எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் மற்றும் எம். பி.க்கள் எம். ஆலாலசுந்தரம், கே. இராசலிங்கம். மாவட்ட அபிவிருத்திசபை தலைவர் திரு. சு. நடராசா, அபிவிருத்திசபை உறுப்பினர் திரு. ந. இராசேந்திரன், மாவை. சேனாதிராசா, உரும்பிராய் கிராமோதய சபைத் தலைவர் திரு. ந. அரியரத்தினம் உட்பட பலர் உரை நிகழ்த்துவர். (மா)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63 இலக்க அச்சகத்தில் 1982 ஆம் ஜூன் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81
Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.